Registered as a News Paper
பக்கங்கள் 06
விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | மாசி 06 | [17 - 02 - 1993] | புதன்கிழமை | ஓசை 365

## எயிட்ஸ் தடுப்பு மருந்து கண்டுபிடிப்பது சந்தேகம்

எயிட்ஸ் நோயைக் குணப்படுத்தும் மருந்து விஞ்ஞான ரீதியாகக் கண்டுபிடிக்கப்படாமலே போய் விடலாம் என்று நோய்த் தடுப்புப்பற்றி ஆராய்ச்சி செய்துவரும் முக்கிய அமெரிக்க விஞ்ஞானியான பானியேசனாவேசி கூறியுள்ளார். எயிட்ஸ் வைரசுக்கள் ஏனைய நோய்க்கிருமிகளைவிட மிகமிகச் சிக்கலானது. அதனைப் புரிந்துகொள்ளும் எல்லா முயற்சிகளுக்கும் அப்பாற்பட்டு நிற்கிறது என்று பஸ்மியா மாநாடு ஒன்றில் தெரிவித்தார். நோய் பரவுவதை இதுபற்றிய (6 ஆம் பக்கம் பார்க்க)

# தென்மராட்சியில் நேற்றும் விமானக் குண்டு வீச்சு

## படகுகள் பல நாசம்

(பளை)

தென்மராட்சிப் பகுதியில் நேற்று இரண்டாவது நாளாக சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதலை நடாத்தியுள்ளன. தட்டுவன்கொட்டி கரையோரப் பகுதியில் சுமார் முப்பது நிமிடங்கள் இத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இத்தாக்குதலினால் நான்கு படகுகள் சேதமடைந்தன.

நேற்று மாலை 3.30 மணியளவில் தென்மராட்சியிலுள்ள தட்டுவான் கொட்டி, அல்லிப்பளை, எழுதுமட்டுவாள், வெட்டைக்காடு, புலோப்பளை பகுதிகளை வட்டமிட்ட சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் முப்பது நிமிடங்களில் நான்கு குண்டுகளை வீசின.

இக் குண்டுகள் தட்டுவான் கொட்டிப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததில் கரையோரமாக நங்கூரமிட்டிருந்த நான்கு படகுகள் சேதமடைந்தன.

இத்தாக்குதல் நடாத்தப்பட்டவேளை அப்பகுதியில் பொதுமக்கள் எவரும் இன்மையால் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று முன்தினமும் இளாலி கடற்பரப்பில் சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல் நடாத்தியது தெரிந்ததே

## ராணுவத்தீர்வே சிங்கள அரசின் நாசகாரத் திட்டமாகும்

### - 'விடுதலைப் புலிகள்' தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"யாழ். குடாநாட்டின் மீது பெரும் படையெடுப்பை நடாத்தி விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்க வேண்டும் இதுவே பிரேமா அரசின் தற்போதைய நாசகாரத் திட்டமாகும் விடுதலைப் புலிகளே தமிழீழத் தேசியத்தின் ஆயுதக்கவசம் புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டால் சிங்களப் பேரினவாதத்திற்கு விடப்பட்டிருக்கும் தமிழீழத் தேசியத்தினது பாதுகாப்புக் கவசம் உடைந்து நொருங்கும் இதன் பின் சிங்களப் பேரினவாதம் தமிழீழத் தேசியத்தைக் கொல்லும். தமிழீழ விடுதலைப் போராட்டம் வேரடி மண்ணுடன் பிடுங்கி வீசப்படும். இத்தத் தீவு சிங் (6 ஆம் பக்கம் பார்க்க)

யாழ் பல்கலைக் கழக

## வெளிவாரி பரீட்சையில் 35 வீத மாணவர் சித்தி

யாழ். பல்கலைக்கழக வெளி

சுமார் 643 மாணவர்கள்

## நிரந்தர நியமனம்

(கொழும்பு)

பட்டதாரி ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் முடிவுகளை கல்விச் சேவைகள் ஆணைக்குழு பெற்றுள்ளது.

இப் பட்டதாரிகள் மேற்படி பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் நிரந்தரமாக்கப்படுவதோடு பட்டதாரி ஆசிரியர்களுக்கான சம்பளமும் அவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகள் எவரும் இல்லை

(கொழும்பு)

'சுதந்திர தினத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகள் உறுப்பினர் எவரும் விடுதலை செய்யப்படவில்லை'' என சிறிலங்காவின் பிரதமரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜயதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி பா. உ. நிமால் டி சில்வா பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான அடிப்படையில் பொதுமன்னிப்பு வழங்கி பல சிங்கள, முஸ்லிம் இளைஞர்கள் விடுவிக்கப்பட்டது போலவே 20 தமிழ் இளை (6 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழநாதம் 3 ஆண்டு நிறைவு போட்டி முடிவுகள்

### சிறுகதைப் போட்டி

**முதலாம் பரிசு**

"அப்புவும் நானும்"
சி. பரமானந்தன்
உச்சி அம்மன் கோயிலடி
சரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

**இரண்டாம் பரிசு**

''பசியல்ல...... தாகம்''
ப. கேதீஸ்வரநாதன்
120, பலாலி வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

**மூன்றாம் பரிசு**

''தந்தையும் தம்பியும்''
சி. ஸ்ரீகணேசலிங்கம் (விஜயா)
அற்கின்சன் வீதி,
வட்டுக்கோட்டை.

### கவிதைப் போட்டி

**முதலாம் பரிசு**

"இனியும் சுருண்டு படுக்காதே"
கி. சிவஞானம்
வண்ணாங்கேணி,
பளை.

**இரண்டாம் பரிசு**

''புதுக்கீதை பிறக்குது ஈழத்திலே''
வளவை வளவன் (தா. மா. செல்லத்தம்பி)
மந்துவில், கொடிகாமம்.

**மூன்றாம் பரிசு**

"இலக்கு''
சி. ஜெயவதனா
முள்ளியவளை.

# படகுகள் பல நாசம்

(பளை)

தென்மராட்சிப் பகுதியில் நேற்று இரண்டாவது நாளாக சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதலை நடாத்தியுள்ளன. தட்டுவன்கொட்டி கரையோரப் பகுதியில் சுமார் முப்பது நிமிடங்கள் இத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இத்தாக்குதலினால் நான்கு படகுகள் சேதமடைந்தன.

நேற்று மாலை 3.30 மணியளவில் தென்மராட்சியிலுள்ள தட்டுவான் கொட்டி, அல்லிப்பளை, எழுதுமட்டுவாள், வெட்டைக்காடு, புலோப்பளை பகுதிகளை வட்டமிட்ட சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் முப்பது நிமிடங்களில் நான்கு குண்டுகளை வீசின.

இக் குண்டுகள் தட்டுவான் கொட்டிப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததில் கரையோரமாக நங்கூரமிட்டிருந்த நான்கு படகுகள் சேதமடைந்தன.

இத்தாக்குதல் நடாத்தப்பட்டவேளை அப்பகுதியில் பொதுமக்கள் எவரும் இல்லைமையால் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று முன்தினமும் இளாலி கடற்பரப்பில் சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல் நடாத்தியது தெரிந்ததே

# ராணுவத்தீர்வே சிங்கள அரசின் நாசகாரத் திட்டமாகும்

## - 'விடுதலைப் புலிகள்' தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"யாழ். குடாநாட்டின் மீது பெரும் படையெடுப்பை நடாத்தி விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்க வேண்டும் இதுவே பிரேமா அரசின் தற்போதைய நாசகாரத் திட்டமாகும் விடுதலைப் புலிகளே தமிழீழத் தேசியத்தின் ஆயுதக்கவசம் புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப் பட்டால் சிங்களப் பேரினவாதத்திற்கு விட்டிருக்கும் தமிழீழத் தேசியத்தினது பாதுகாப்புக் கவசம் உடைந்து நொருங்கும் இதன் பின் சிங்களப் பேரினவாதம் தமிழீழத் தேசியத்தைக் கொல்லும். தமிழீழ விடுதலைப் போராட்டம் வேரடி மண்ணுடன் பிடுங்கி வீசப்படும். இத்தத் தீவு சிங

[6 ஆம் பக்கம் பார்க்க]

யாழ் பல்கலைக் கழக

# வெளிவாரி பரீட்சையில் 35 வீத மாணவர் சித்தி

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிபட்டப்படிப்புப்பிரிவினால் கடந்த ஆண்டு முதன்முறையாக நடாத்தப்பட்ட கலை, வர்த்தகம் ஆகிய துறைகளுக்கான முதலாம் ஆண்டுப் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின. சுமார் 35 வீதமான மாணவர்கள் இப்பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்துள்ளனர்.

சுமார் 643 மாணவர்கள் இப்பரீட்சைகளுக்கு விண்ணப்பித்திருந்தனர் ஒரு சில பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களது விபரங்கள் அடுத்த வாரமளவில் வெளிவரும் என்று கூறப்படுகிறது அனைத்து பாடங்களிலும் சித்தியடைந்தவர்களது பெயர்ப் பட்டியல் 5 ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.

திருக்கோணமலை நகரில்

# வைத்தியசாலை அமைக்க 500 குடும்பம் வெளியேற்றம்

(கொழும்பு)

திருக்கோணமலையில் வட-கிழக்கில் மிகப்பெரிய வைத்தியசாலையொன்று கட்டப்பட இருப்பதாகவும், இதற்கென திருக்கோணமலை நகர்ப்பகுதியிலுள்ள சுமார் 500 குடும்பங்களை அடுத்தமாதம் 5ஆம் திகதிக்கு முன் அவ்விடத்தை விட்டு வெளியேறிவிடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களுக்கு நகருக்கு வெளியே வீடுகட்ட இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ் வைத்தியசாலைக்கான நிதியாக 50 கோடி ரூபாவை இத்தாலிய அரசாங்கம் வழங்க முன்வந்திருப்பதாக தெரியவருகிறது.

**உளவாளிகள்!!!**

**அவதானமாக இருக்கவும்..!**

தன் தேவை நிறைவேற

நல்ல காரணம் கூறுவான் உளவாளி!

# நிரந்தர நியமனம்

(கொழும்பு)

பட்டதாரி ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் முடிவுகளை கல்விச் சேவைகள் ஆணைக்குழு பெற்றுள்ளது.

இப் பட்டதாரிகள் மேற்படி பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் நிரந்தரமாக்கப்படுவதோடு பட்டதாரி ஆசிரியர்களுக்கான சம்பளமும் அவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகள் எவரும் இல்லை

(கொழும்பு)

'சுதந்திரதினத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகள் உறுப்பினர் எவரும் விடுதலை செய்யப்படவில்லை" என சிறிலங்காவின் பிரதமரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜயதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி பா. உ. நிமால் டி சில்வா பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான அடிப்படையில் பொதுமன்னிப்பு வழங்கி பல சிங்கள, முஸ்லிம் இளைஞர்கள் விடுவிக்கப்பட்டது போலவே 20 தமிழ் இளை

[6 ஆம் பக்கம் பார்க்க]

# பாதுகாப்பு செலவினத்தில் சிறிலங்கா 2 ஆம் இடம்

[யாழ்ப்பாணம்]

ஆசிய உபகண்டத்தில் அதிகளவு பாதுகாப்புச் செலவினத்தை மேற்கொள்ளும் நாடுகளில் இலங்கை இரண்டாம் இடத்தில் உள்ளது. முதலாம் இடத்தை பாகிஸ்தான் பெற்றுள்ளது.

இலங்கையின் மொத்தத் தேசிய வருமானம் முப்பத்தொன்பதாயிரத்து இருநூற்றி எண்பத்தொன்பது மில்லியன் ரூபாவாகும். இதில் 6.7 வீதத்தை பாதுகாப்புச் செலவுக்காக அரசு செலவிடு

[6 ஆம் பக்கம் பார்க்க]

# 65 பயணிகள் குமணமூலம் பயணம்

பருத்தித்துறை துறைமுகத்திற்கு நேற்று காலை வந்து சேர்ந்த 'குமண' கப்பலில் நோயாளிகள், உறவினர்கள், பயணிகள் உட்பட 79 பேர் வந்தனர். இதேபோல் 65 பேர் திருகோணமலை நோக்கிப் புறப்பட்டனர்.

கடந்த பல தடவைகள் நோயாளிகள் போக்குவரத்து தடைப்பட்டதால் இம்முறை கூடுதலான நோயாளிகள் போவதும் வருவதுமாக உள்ளனர். பல நோயாளிகள் எழுந்து நடக்க முடியாத படுக்கை நிலையிலேயே எடுத்து வரப்பட்டனர்.

மற்றும் லீவில் வந்து பயணத்தைத் தொடர முடியாமல் இருந்த உத்தியோகத்தர்களும் நேற்று கப்பல் மூலம் செல்வதை அவதானிக்க முடிந்தது.

மேலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த மூன்று உயர் அதிகாரிகள் கப்பல் மூலம் வந்தனர். இதில் ஒருவர் கப்பலுக்கு பொறுப்பானவரென்றும் தெரியவருகிறது. இம்மூவரும் இறங்குதுறைப் பகுதியையும் பார்வையிட்டனர்

மீண்டும் நாளை வரும் இக்கப்பலில் நோயாளிகள் செல்வர். அன்று யாழ். அரசாங்க அதிபரும் கொழும்பு புறப்படவுள்ளார். (யோ)

## முதலாம் பரிசு

"அப்புவும் நானும்"

சி. பரமானந்தன்

உச்சி அம்மன் கோயிலடி

கரணவாய் கிழக்கு,

கரவெட்டி.

## இரண்டாம் பரிசு

"பசியல்ல...... தாகம்"

ப. கேதீஸ்வரநாதன்

120, பலாலி வீதி,

திருநெல்வேலி தெற்கு,

யாழ்ப்பாணம்.

## மூன்றாம் பரிசு

"தந்தையும் தம்பியும்"

சி. ஸ்ரீகணேசலிங்கம் (விஜயா)

அற்கின்சன் வீதி,

வட்டுக்கோட்டை.

# கவிதைப் போட்டி

## முதலாம் பரிசு

"இனியும் சுருண்டு படுக்காதே"

இ. சிவஞானம்

வண்ணாங்கேணி,

பளை.

## இரண்டாம் பரிசு

"புதுக்கீதை பிறக்குது ஈழத்திலே"

வளவை வளவன் (தா. மா. செல்லத்தம்பி)

மந்துவில், கொடிகாமம்.

## மூன்றாம் பரிசு

"இலக்கு"

சி. ஜெயவதனா

முள்ளியவளை.

# கருத்துப் படப்போட்டி

கருத்துப் படப் போட்டியில் பெருமளவானோர் பங்கு பற்றிய போதும் பரிசிற்கு தகுதியுடையதாக எதுவும் தெரிவாகவில்லை. எனினும் போட்டியில் பங்குபற்றிய மூவருக்கு ஊக்குவிப்பு பரிசுகள் வழங்கப்படுகின்றன. அவர்களின் விபரம் வருமாறு:-

**குமாரசாமி சூரியகுமார்**

மே/பா. திரு. சி. அருளம்பலம்

ஏழாலை வடக்கு, ஏழாலை.

**வி. மனோகர்**

252, பருத்தித்துறை வீதி

நல்லூர், யாழ்ப்பாணம்.

**முத்துக்குமாரு இராதாகிருஷ்ணன்**

கலாசாலை - அருகில்

கோப்பாய் தெற்கு,

கோப்பாய்.

# சிறப்புப் பரிசில்கள் விபரம் நாளை!

மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி மக்கள் தினசரி ஈழநாதத்தில் மூன்றாமாண்டில் (19-02-92 — 18-02-93) பிரசுரமான சிறுகதை, கவிதை என்பனவற்றில் சிறப்பானவற்றிற்கு தெரிவின் அடிப்படையில் பன்று பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இப்பரிசு பெறுபவர்களின் பெயர் மற்றும் இப்பரிசு தொடர்பான ஏனைய அறிவிப்புக்களும் நாளைய ஈழநாதத்தில் வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## வரி விளம்பரம்

### மீரா பிரசுரங்கள்

இளைஞர்களின் மனதைக் கெடுக்காமல் அவர்களைச் சிந்திக்க வைக்கும் நாவல்கள், விடியலைத் தேடி, அக்கினி, இலைத்தில் சில உள்ளங்கள், மீண்டும் புதிதாய்ப் பிறப்போம், சுவடுகள், விண்ணில் அல்ல விடிவெள்ளி. (4260)

### 'நியூ விக்ரேஸ்'

ரெலிவிசன் வீடியோ டெக், றேடியோ, ரேப்றெக்கோடர், எலெக்ரோனிக் சுமறா, கைக் கடிகாரங்கள் மற்றும் மின்சார வேலைகள் எபேஜன்சி வைற் பற்றறிகள் திருத்தி சார்ச் செய்தல், பாடல்கள் பதிவு செய்தல், வீடியோ படப்பிடிப்புகள் யாவும் நிபுணர்களால் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். நியூ விக்ரேஸ்' எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ் மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (4060)

### திருக்கணித பஞ்சாங்கம்

ஸ்ரீமுக புதுவருட (1993-94) திருக்கணித பஞ்சாங்கம் விற்பனையாகிக்கொண்டிருக்கிறது வியாபாரிகளுக்குத் தகுந்த கமிஷன் உண்டு விலை ரூபா 65 00 பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [4281]

### துளிர்

தமிழ் நாடு அறிவியல் இயக்கமும் புதுவை அறிவியல் இயக்கமும் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான மாதாந்த அறிவியல் இதழ், மற்றும் சலனம், சுபமங்களா, முன்றில், ஆகவே, காலம், நந்தனா போன்ற தரமான சஞ்சிகைகளும் புத்தகங்களும் விற்பனையாகின்றன விபரங்கட்கு வசந்தம் புத்தக நிலையம், 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். [4061]

### சலனம்

சென்னை ஃபிலிம் சொஸைட்டி வெளியிடும் உலக சினிமா தரம் பற்றிய விமர்சன சஞ்சிகை இருமாத இதழாக வெளிவருகின்றது. விபரங்கட்கு, வசந்தம் புத்தக நிலையம். 405. அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (4063)

### சைனா மெசின்

கொப்பிகள், புத்தகங்களுக்கு கவர்போடக்கூடிய சைனா மசின் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா வீதி யாழ்ப்பாணம். (4062)

## கௌரவிப்பு

1992-ம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் பல்கலைக்கழகங்களுக்கிடையிலே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய வீரர்களைக் கௌரவிக்கும் முகமாக ஒரு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக மண்டபத்தில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆ. துரைராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

ஆர். சோதிலிங்கத்திற்கு தங்கப்பதக்கமொன்று வழங்கப்பட்டது. இவர் 100 மீற்றர் போட்டியிலும், 200 மீற்றர் போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்று இரு நிகழ்ச்சிகளிலும் சாதனை நிலைநாட்டி சிறந்த வீரராக தெரிவுசெய்யப்பட்டு அகில இலங்கை கேடயத்தை சுவீகரித்துக் கொண்டமை பாராட்டுக்குரியது

கலாநிதி திரு தி சிவபாலன், திரு ப. சயந்தகுமார், திரு. சி. சிவபாதசுந்தரம், திரு சி. தியாகராஜா உடற்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் உரையாற்றினார்கள். (42)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்தின் 1993 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு கடந்த 5ஆம் திகதி நடைபெற்றது.

இதில் தலைவராக திரு. க செல்வரட்ணமும் உபதலைவராக பா, லிங்கநாதனும் செயலாளராக திரு. மு. பத்மநாதனும் உபசெயலாளராக திரு. சி இராசலிங்கமும் பொருளாளராக திரு. மு ஜெகநாதனும் தெரிவு செய்யப்பட்டதுடன் 8 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

★

(பருத்தித்துறை)

கெருடாவில் தெற்கு கலையரசி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றபோது தலைவராக திரு. மா. தம்பித்துரையும், செயலாளராக திரு. கா. குருந்தவராசாவும், பொருளாளராக திரு இ பிறேமதாசும் தெரிவு செய்யப்பட்டனர். (25)

## ஓய்வூதியம்

[illegible]நகர் பல நோ கூ. சங்கம் மூலம் ஓய்வூதியம் பெறுவோருக்கான மாசிமாத ஒய்வூதியக் கொடுப்பனவு இன்று புதன் காலை 9 முதல் 12 மணிவரை வழக்கம்போல் உள்ள தற்காலிக கிராமிய வங்கி காரியாலயத்தில் வழங்கப்படும்.

## வீரவணக்க கூட்டம்

## இந்த மண்ணின் படைப்புக்களை வெறுக்கும் மனநிலை மாறட்டும்

- டிவகலாலா

(குருநகர்)

"ஜே ஆர் ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக பதவி ஏற்ற அடுத்த முதலில் திருக்கோணமலைக்கு விஜயத்தை மேற்கொண்டு வந்தார். அப்பொழுது நான் அங்கே வேலை செய்து கொண்டிருந்தேன்.

இனரீதியாக கச்சேரி உத்தியோகத்தர்களின் விகிதாசாரத்தைக் கேட்டறிந்தார். ஆறே மாதங்களில் 80 சதவீதமாக இருந்த தமிழ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தலைகீழாக மாறியது"

இவ்வாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சுந்தரம் டிவகலாலா தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற ஜோசப்பாலாவின் சிறுகதைத் தொகுதி "தரிசனம்" வெளியீட்டுரையை நிகழ்த்துகையில் அவர் இவ்விதம் கூறினார்.

திரு. செம்பியன் செல்வன் தலைமையில் விழா நடைபெற்றது.

திரு. சு. டிவகலாலா தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:

அதே ஜே. ஆர் ஜெயவர்த்தனா இந்நாட்டில் தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்கினால் தமிழ்மொழி சிங்கள மொழியை விழுங்கிவிடும் என்றும் தெரிவித்தார்.

இந்த மண்ணில் இருந்து லட்சக்கணக்கான பணம் பிற நாட்டு நூல்களைக் கொள்வனவு செய்ய செலவழிக்கப்படுகிறது. இந்த மண்ணின் மக்கள் இந்த மண்ணின் படைப்புக்களை வெறுக்கும் நிலை மாறவேண்டும்" இவ்வாறு அவர் தெரிவித்தார்.

வண. எஸ். எச். ஜெநேசன் அடிகள், கவிஞர் யாழ். ஜெயம் ஆகியோர் ஆசியுரையும், வாழ்த்துப்பாவும் வழங்கினர்.

திருமதி பி. எவ். சின்னத்துரை, திரு. எம். சண்முகலிங்கம் ஆகியோர் கருத்துரை நிகழ்த்தினர்.

நூலாசிரியரின் பதிலுரையை அடுத்து அமுதமொழியன் நன்றி கூறினார். (21)

## ஐ. நா. வழங்கிய உணவு தென் பகுதியில் விநியோகம்

[கொழும்பு]

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு திட்டத்தின் கீழ் வட கிழக்குப் பகுதிகளுக்கென வழங்கப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களை சிறிலங்கா அரசு முஸ்லிம், சிங்களமக்கள் வாழும் ஏனைய பகுதிகளுக்கு அனுப்பிவைத்துள்ளது

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் அத்தியாவசிய உணவுப்பொருள்களை வடக்கு கிழக்கு மக்களுக்கு வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபை உலக உணவுத்திட்டம் இணங்கியிருந்தது.

சுமார் 5000 மெற்றிக் தொன் அரிசி, சீனி போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களை சிறிலங்கா அரசு இவ்வாறு வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைத்துள்ளது.

புத்தளம், அனுராதபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு இவ் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## சுதந்திரக் கட்சி எதிர்காலத்தில் தேர்தலில் வெல்ல முடியாது

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி எதிர்வரும் தேர்தல்களில் ஒருபோதும் வெல்ல முடியாது என சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார். பொதுமக்களின் அபிப்பிராயத்தை நிச்சயப்படுத்திக்கொள்ள திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நீண்டகாலம் காத்திருக்க வேண்டியதில்லை எனவும் அவர் கூறினார்.

கடந்த ஞாயிறு அன்று கடவத்தையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பிரேமதாசா இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் வளர்ச்சிக்கால வேலைத்திட்டங்களை எதிர்க்கட்சிகள் விமர்சிப்பதாகவும், சிறிமா கொழும்பில் குளிரூட்டப்பட்ட சூழ்நிலையில் இருந்தபடி வரண்ட பிரதேச மக்களைப் பற்றிப் பேசவில்லை என்றும் ஆனால் தான் நேரடியாக அந்தந்தப் பகுதிகளுக்குச் சென்று குறை தீர்த்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## மாகாண சபைத் தேர்தலில் ஈ.பி.டி.பி போட்டியிடுமாம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களில் ஈ. பி. டி. பி. கட்சி தனித்துப் போட்டியிடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் தாம் எந்தவொரு இயக்கத்துடனும் கூட்டுச்சேரப் போவதில்லை எனவும் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய இடங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தமது பூரண ஆதரவை வழங்கப் போவதாகவும் அக் கட்சி அறிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கில் விரக்தி நிலையில் உள்ள மக்களுக்கு ஈ. பி. டி. பி. பெரும் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுக்கும் எனவும் அது மேலும் தெரிவித்துள்ளது.

## சிவராத்திரி விழா

(கொக்குவில்)

கொக்குவில் ஸ்ரீசாயி துர்க்கா தேவி ஆலய மகாசிவராத்திரி விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

அன்றையதினம் மாலை 6 மணிக்கும் இரவு 9 மணி நள்ளிரவு 12 மணி அதிகாலை 3 மணிக்கும் அபிஷேகமும் விசேட பூசைகளும் நடைபெறவுள்ளது

இதனைத் தொடர்ந்து நாதஸ்வர தவில்கச்சேரி வில்லிசைக் கச்சேரி, வயலின், சோலோ ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளதாக பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர்.

## நினைவு கூருகின்றோம்...

### 1993-2-17

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை - சாவாறுப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப் பிரிந்த -

சுமன் [துரைராசா ஜெயக்குமார் - காரைதீவு - அம்பாறை]

சுதர்சன் [ஐயம்பெருமாள் கருணாகரன் - பனங்காடு அக்கரைப்பற்று - அம்பாறை]

1988 ஆம் ஆண்டு திருமலை - மூதூர், அலு - ஒலுவைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ தர்மலிங்கம் தங்கத்துரை [ஈச்சிலம்பத்தை, மூதூர் - திருமலை]

1989 ஆம் ஆண்டு அம்பாறை - நிந்தவூர்ப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் கொலை செய்யப்பட்ட -

நசீர் [சம்சுதீன் நசீர் - ஒலுவில் - அம்பாறை]

முன்னைத்தீவில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மாமுனையைச் சேர்ந்த தமிழினைஞன்.

1991 ஆம் ஆண்டு மன்னார் - தொண்டைச்சிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

மேஜர் ராதாரவி [சிவகுரு சிவபாலன் - 102, பாரதி வீதி, முழங்காவில் - மன்னார்]

லெப். ஏகாம்பரம் [மார்க்முத்து மகாலிங்கம் - 12-ம் கட்டை, மாளிகைப்பிட்டி, முருங்கன் - மன்னார்]

ஞானமுத்து [ஜோன்பற்றிக் அந்தோணி - பள்ளிமுனை - மன்னார்]

கப்டன் துரைமணி [பசுபதி தவராசா - 2-ம் பண்ணை, செட்டிகுளம் - வவுனியா]

மேஜர் சூரி [நடேஸ்வரன் - 35, ஜெகதீஸ்வரி வீதி, வட்டக்கச்சி - கிளிநொச்சி]

மன்னார்த் தீவிலிருந்து வந்து கொண்டிருந்தபோது வங்காலையில் முகாமிட்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்ட முருங்கன் ம. ம. வித்தியாலய உப அதிபர், ஆசிரியர் ஆகிய 2 தமிழர்கள்.

1992 ஆம் ஆண்டு சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது எமைப்பிரிந்த-

ஜானகி (புவனேஸ்வரி எட்வின் - [illegible] வீதி,

சொம்பிளெக்ஸ் மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (4060)

### திருக்கணித பஞ்சாங்கம்

ஸ்ரீமுக புதுவருட (1993-94) திருக்கணித பஞ்சாங்கம் விற்பனையாகிக்கொண்டிருக்கிறது. வியாபாரிகளுக்குத் தகுந்த கமிஷன் உண்டு. விலை ரூபா 65 00. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [4281]

### துளிர்

தமிழ் நாடு அறிவியல் இயக்கமும் புதுவை அறிவியல் இயக்கமும் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான மாதாந்த அறிவியல் இதழ், மற்றும் சலனம், சுபமங்களா, முன்றில், ஆகவே, காலம், நந்தனா போன்ற தரமான சஞ்சிகைகளும் புத்தகங்களும் விற்பனையாகின்றன. விபரங்கட்கு வசந்தம் புத்தக நிலையம், 405, அருச்சுனாவீதி, யாழ்ப்பாணம். [4061]

### சலனம்

சென்னை ஃபிலிம் சொஸைட்டி வெளியிடும் உலக சினிமா தரம் பற்றிய விமர்சன சஞ்சிகை இருமாத இதழாக வெளிவருகின்றது. விபரங்கட்கு, வசந்தம் புத்தக நிலையம். 405. அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (4063)

### சைனா மசின்

கொப்பிகள், புத்தகங்களுக்கு கவர்போடக்கூடிய சைனா மசின் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனாவீதி யாழ்ப்பாணம். (4062)

### போத்தல்கள் தேவை

ஜம், பியர், சோடியல் போத்தல்கள் தொடர்ந்து எம்மால் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது. Taste Line Industries Pvt. Ltd, 14, Seenior Lane, Jaffna. [4046]

## நிர்வாகிகள் தெரிவு

யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்தின் 1993 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு கடந்த 5ஆம் திகதி நடைபெற்றது.

இதில் தலைவராக திரு. க. செல்வரட்ணமும் உபதலைவராக பா. லிங்கநாதனும் செயலாளராக திரு. மு. மதிசநாதனும் உபசெயலாளராக திரு. சி. இராசலிங்கமும் பொருளாளராக திரு. மு. ஜெகநாதனும் தெரிவு செய்யப்பட்டதுடன் 8 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

★

(பருத்தித்துறை)

வெருடாவில் தெற்கு கலையரசி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றபோது தலைவராக திரு. மா. தம்பித்துரையும், செயலாளராகதிரு. கா. சுருந்துவராசாவும், பொருளாளராக திரு இ. பிறேமதாசும் தெரிவு செய்யப்பட்டனர். (25)

## ஓய்வூதியம்

காரைநகர் ப. நோ. கூ. சங்கம் மூலம் ஓய்வூதியம் பெறுவோருக்கான மாசிமாத ஓய்வூதியக் கொடுப்பனவு இன்று புதன் காலை 9 முதல் 12 மணிவரை வழக்கம்பரையில் உள்ள தற்காலிக கிராமிய வங்கி காரியாலயத்தில் வழங்கப்படும்.

## வீரவணக்க கூட்டம்

உடுவில் / தெல்லிப்பழை வட்டத்தின் 2ஆம் மாதம் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்றுஇரவு 7.30மணிக்கு மயிலணி முருகமூர்த்தி கோவிலடியில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வின் போது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

தலைமையில் விழா நடைபெற்றது. ...யை அடுத்து அமுதமொழியன் நன்றி கூறினார். (21)

## ஐ. நா. வழங்கிய உணவு தென்பகுதியில் விநியோகம்

[கொழும்பு]

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு திட்டத்தின் கீழ் வட கிழக்குப் பகுதிகளுக்கென வழங்கப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களை சிறிலங்கா அரசு முஸ்லிம், சிங்களமக்கள் வாழும் ஏனைய பகுதிகளுக்கு அனுப்பிவைத்துள்ளது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் அத்தியாவசிய உணவுப்பொருள்களை வடக்கு கிழக்கு மக்களுக்கு வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபை உலக உணவுத்திட்டம் இணங்கியிருந்தது.

சுமார் 5000 மெற்றிக் தொன் அரிசி, சீனி போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களை சிறிலங்கா அரசு இவ்வாறு வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைத்துள்ளது.

புத்தளம், அனுராதபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு இவ் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## சுதந்திரக் கட்சி எதிர்காலத்தில் தேர்தலில் வெல்ல முடியாது

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி எதிர்வரும் தேர்தல்களில் ஒருபோதும் வெல்ல முடியாது என சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார். பொதுமக்களின் அபிப்பிராயத்தை நிச்சயப்படுத்திக் கொள்ள திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நீண்டகாலம் காத்திருக்க வேண்டியதில்லை எனவும் அவர் கூறினார்.

கடந்த ஞாயிறு அன்று கடவத்தையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பிரேமதாசா இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் வளர்ச்சிக்கால வேலைத்திட்டங்களை எதிர்க்கட்சிகள் விமர்சிப்பதாகவும், சிறிமா கொழும்பில் குளிரூட்டப்பட்ட சூழ்நிலையில் இருந்தபடி வரண்ட பிரதேசமக்களைப் பற்றிப் பேசவில்லை என்றும் ஆனால் தான் நேரடியாக அந்தந்தப் பகுதிகளுக்குச் சென்று குறை தீர்த்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு
1965.11.20

உதிர்வு
1993.01.18

மசலஷி சுமதி கந்தையா
(தொண்டர் ஆசிரியர் நாவலை இயற்றாலை அ. மி. த. க. பாடசாலை)

சொல்லு மொழி கற்கண்டு சிரிப்பே சித்திர
சூதுவாதில்லாத தூய வாழ்வு
எல்லோருக்கும் நல்லவளாய் வாழ்ந்தாய் இன்று
ஈசனடி சேர்ந்ததனை எண்ணுந் தோறும்
பொல்லாத விதியினது கொடுமை கண்டு
புலம்புகிறோம் ஏங்குகிறோம் பெருமிதேசமே
வல்லசிவன் திருவடியில் ஏற்றிடும் என்று வேண்டி
வடிக்கின்ற கண்ணீரை ஏற்பீர் சாந்தி.

அன்னாரின் இல்லத்தில் 17-2-93 (இன்று) நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

"கீதாஞ்சலி"
மந்துவில் மேற்கு,
கொடிகாமம். (3378)

அன்புத்தாய், சகோதரர்கள்
மச்சான்மார், மச்சாள்மார்,
மருமக்கள் பெறாமக்கள்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

ஊர்காவற்றுறைப் பிரிவுக்
குழு உறுப்பினர் தெரிவுக்கான

## விசேட பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் எதிர்வரும் 14-03-93 முற்பகல் 10 00 மணிக்கு யாழ். கிளைத் தலைமையகத்தில் நடைபெறும்.

நியமனப் பத்திரங்களை 03 03 93 தொடக்கம் கிளையில் பெற்றுக்கொள்ளலாம். 06 03-93 முற்பகல் 9 00 மணி தொடக்கம் பிற்பகல் 4 00 மணி வரை நியமனப் பத்திரங்கள் கிளையில் ஏற்றுக்கொள்ளப்படும்- 08-03-93 முற்பகல் 9.00 மணி வரை நியமனப்பத்திரங்கள் வாபஸ் பெற்றுக்கொள்ளலாம்.

09-11-92 வரை அங்கத்துவப் பணம் கிளையில் செலுத்தியோர் மாத்திரமே மேற்படி தெரிவிலும், கூட்டத்திலும் பங்குபற்றத் தகுதியுடையோர்களாவர்.

கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம், 16.02.1993. (சி-6044)

## 1993-2-17

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை - சாகாமப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் சாவைத் தழுவிய -

சுமன் [ஜெயராசா ஜெயக்குமார் - காரைதீவு - அம்பாறை]

சுதர்சன் [ஐயம்பெருமாள் கருணாகரன் - பனங்காடு அக்கரைப்பற்று - அம்பாறை]

1988 ஆம் ஆண்டு திருமலை - மூதூர், அலு - ஒலுவைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ தர்மலிங்கம் தங்கத்துரை [ஈச்சிலம்பற்றை, மூதூர் - திருமலை]

1989 ஆம் ஆண்டு அம்பாறை - நிந்தவூர்ப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் கொலை செய்யப்பட்ட -

நசீர் [சம்சுதீன் நசீர் - ஒலுவில் - அம்பாறை]

முல்லைத்தீவில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மாமூலையைச் சேர்ந்த தமிழினைஞன்.

1991 ஆம் ஆண்டு மன்னார் - கொண்டைச்சிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

மேஜர் ராதாரவி [சிவகுரு சிவபாலன் - 102, பாரதி வீதி, முழங்காவில் - மன்னார்]

லெப். ஏகாம்பரம் [மாரிமுத்து மகாலிங்கம் - 12-ம் கட்டை, மாளிகைப்பிட்டி, முருங்கன் - மன்னார்]

ஞானமுத்து [ஜோன்பற்றிக் அந்தோனி - பள்ளிமுனை - மன்னார்]

கப்டன் துரைமணி (பசுபதி தவராசா - 2-ம் பண்ணை, செட்டிகுளம் - வவுனியா]

மேஜர் சூரி (நடேஸ்வரன் - 35, ஜெகதீஸ்வரி வீதி, வட்டக்கச்சி - கிளிநொச்சி)

மன்னாரிலிருந்து வந்து கொண்டிருந்தபோது வங்காலையில் முகாமிட்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்ட முருங்கன் ம. ம. வித்தியாலய உப அதிபர், ஆசிரியர் ஆகிய 2 தமிழர்கள்.

1992 ஆம் ஆண்டு சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது சாவைத்தழுவிய-

ஜானகி (புவனேஸ்வரி எட்வின் - வேம்பையன் வீதி, உதயநகர் - கிளிநொச்சி)

வவுனியா - விளக்குவைத்தகுளம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

மங்களா (தேவிகா அப்புத்துரை - தம்பிராய், பூநகரி - கிளிநொச்சி)

கலாநிதி (பாலமனோகரி குணசேகரம் - ஆழியவளை, தாளையடி, யாழ்.)

யாழ் - அச்சுவேலி, வளலாய்ப் பகுதியில் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

லெப். தில்லை - சுரேஸ் (அருளானந்தம் ஜெயசீலன் - இன்பருட்டி, பருத்தித்துறை - யாழ்.)

கிளிநொச்சி - ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின்போது விழுப்புண் அடைந்திருந்து யாழ் மருத்துவ மனையில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். தங்கப்பன் - ஜெரோம் (அப்புக்குட்டி ரவி - தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி - யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[இ/6034]

# சந்தை விலை விபரங்கள் திரட்ட பொ. மேம்பாட்டுக்கழகம் நடவடிக்கை

இக்கட்டான இப் போர்க் காலச் சூழ்நிலையிலும் மக்களின் அன்றாடத் தேவைகளும் அவர்களது சாதாரண வாழ்க்கையும் பாதிப்படையாவண்ணம் பாதுகாத்துக் கொள்வதில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு பல்வேறு முனைகளில் முயன்று வருகின்றது. இந்த வகையில் மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான உணவுப் பொருள்களின் கொள்வனவு. விற்பனவு ஆகியவற்றில் ஓர் சம நிலையைப் பேணிப், பொருளாதார நிலை சீர் குலைந்துள்ள இவ் வேளையிலும் மக்களின் நலன்காக்கும் பலசெயற்றிட்டங்களைத் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் தமிழீழப் பிரதேசத்தில் அமைந்துள்ள முக்கிய சந்தைகளின் விலை விபரங்கள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் புள்ளிவிபரக்கிளையால் வாரம் இருமுறை திரட்டப்பட்டு வருகின்றது. இவ்வாறு திரட்டப்படும் புள்ளி விபரங்கள் தொகுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்படுகின்றன, இச் செயற்பாடு பல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறிப்பாகப், பொருள்களின் விலை ஏற்றமோ, விலை வீழ்ச்சியோ நுகர்வோரையும், உற்பத்தியாளரையும் பாதித்து விடாமல் குறித்த ஓர் விலையினூடு இருசாராரையும் சமப்படுத்தி உற்பத்தியையும், நுகர்வையும் பாதுகாப்பதே முக்கிய நோக்கமெனலாம். இதன் மூலம் ஓரிடத்தில் பொருள்கள் தேங்கும் நிலையை அகற்றி, அதாவது பொருள்களின் விற்பனவில் முடங்கும் நிலையை நீக்கிப் பரவலான விற்பனைக்கு வழி செய்து உற்பத்தியாளரை ஊக்குவிப்பதோடு, நுகர்வோரது தேவையையும் பூர்த்தி செய்ய முடிகிறது.

அத்துடன் சந்தை விலை விபரங்களை அறிந்து அதற்கேற்ப நுகர்வோர் சந்தைகளை நாடிச் செலும்போது தரகரிடம் ஏமாந்து விடாமல் தடுக்கப்படுகின்றனர்.

தவிர பல்வேறு நெருக்கடிகளுக்கும் மத்தியில் விவசாயிகளின் உழைப்பினூடு உற்பத்தியாக்கப்படும் சந்தைப் பொருள்களின் விலைகளில் தளம்பல்கள் தோன்றி உற்பத்தியாளரைச் சோர்வடையச் செய்வதோ பொருள்கள் பற்றாக்குறை தோன்றி நுகர்வோரைத் தவிப்படையச் செய்வதோ அன்றி இருசாராருக்கும் இடையே சமநிலையைப் பேணுவதற்கு இச் சந்தை விலை விபரத்திரட்டல் நடவடிக்கை அத்தியாவசியமாகின்றது.

இதன் மூலம் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் தனது எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிட முடிகின்றது. திரட்டப்பட்டுக் கோவைப்படுத்தப்பட்ட விபரங்களினூடு எதிர்காலச்சந்தை வசதிகளைத் தீர்மானிக்க முடிகிறது. பதனிடல் போன்ற ஏனைய செயற்பாடுகளையும் முன்கூட்டியே திட்டமிட முடிகின்றது.

இவ்வாறான நிலையில் சந்தையில் தானாகவே தோன்றும் ஒருவித மறைமுக விலைக் கட்டுப்பாடு சந்தைச் சம நிலையைப் பேணுகின்றது. இதனோடு உற்பத்திக்காகச் செலவிடப்படும் மூலதனமும். வளங்களும் கூடப் பேணப்படுகின்றன.

இவை மாத்திரமின்றி. பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் ஏனைய பகுதியான கைத்தொழிற்பகுதி. விவசாயப்பகுதி, போன்ற ஏனைய பகுதிகள் திட்டமிடலுக்கும் செயற்பாட்டுக்கும் கூடப் புள்ளிவிபரக்கிளையின் இச் சந்தைவிலைத் தொகுப்பு நடவடிக்கை உதவுகின்றது.

குறிப்பிட்ட ஒரு பொருளின் உற்பத்தி அதிகரிப்பு அதனைத் தொடர்ந்து ஏற்படும் விலை வீழ்ச்சி போன்ற நிலைகளை இப் புள்ளி விபரங்களினூடு அவதானிக்க முடிவதால் குறிப்பிட்ட இப் பொருளின் உற்பத்தியைக் குறைத்து, குறைவான உற்பத்தியும் கூடிய தேவையுமுள்ள வேறோர் பொருளின் உற்பத்தியை ஊக்குவிக்க முடியும். இதனால் சந்தைச் சம நிலையை மாத்திரமல்ல, தமிழீழத்தின் பொருளாதாரச் சம நிலையையும் பேண முடிகிறது.

இன்றைய பல்வேறு நெருக்கடிகளுக்கும் மத்தியில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தின் இத்தகைய செயற்பாட்டை மேலும் விளக்குவதாயின் கடந்தகால உலகச் சந்தையின் நிகழ்வொன்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

மிகப்பெரும் வல்லரசான அமெரிக்கா குறிப்பிட்டதொரு கால பகுதியில் உலகச் சந்தையின் விற்பனைக்கு மேலதிகமாக அதிகளவு கோதுமையை உற்பத்தி செய்திருந்தது. தேவையான தரவுகள் எதுவுமின்றி இவ்வாறான உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால் அந்த ஆண்டில் உலகச்சந்தையில் கோதுமை விலை பெரும் வீழ்ச்சியடைந்தது. இந்த விலைத்தளம்பலைச் சமாளிக்க முடியாத அமெரிக்க அரசு தேவைக்கதிகமான பல தொன் நிறையுள்ள கோதுமை மாவைக் கடலில் கொட்டி நிலைமையைச் சமாளித்துக் கொண்டதை உலக நாடுகள் அறியும். இவ்வாறான திட்டமிடப்படாத நடவடிக்கைகளின் விளைவுகள் போன்று ஏற்படாதவாறு வீணான விரயங்களை விலக்கிக் கொண்டு பயனுள்ள வழிகளில் தமிழீழத்தை வழி நடத்திச் செல்ல இப் புள்ளி விபரங்கள் உதவுகின்றன.

மொத்தத்தில் நோக்கும் போது மிகக்குறைந்த வாய்ப்பு வசதிகளின் மத்தியிலும். யுத்த மேகங்கள் எங்கும் சூழ்ந்துள்ள வேளையிலும் இவ்வாறான முன்னேற்றமான செயற்பாடுகள் நமது மண்ணின் விரைவான விடிவுக்கு அறிகுறியே எனலாம். ஆயினும் இப் புள்ளி விபரத் திரட்டல் நடவடிக்கையின் நோக்கங்களில் முழுமையான வெற்றி பெறுவதற்கு மேலும் சில அம்சங்களையும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது. அதாவது. புள்ளி விபரவியலில் விபரங்கள் திரட்டப்படுவதும். தொகுக்கப்படுவதும் எவ்வளவு முக்கிய துவம் பெறுகின்றனவோ அவ்வாறே இவ் விபரங்களின் பரப்புகை செயற்பாடும் முக்கியமாகிறது.

குறிப்பாக இச் சந்தைவிலை விபரங்களை வைத்துக் கொண்டு பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் அடைய முயலுகின்ற இலக்கை அது அடைவதற்கு இப் புள்ளி விபரங்கள் மக்களைச் சென்றடைய வேண்டும். அப்போது தான் எதிர்பார்த்தவாறு சந்தைச் சமநிலையோ, மறைமுக விலைக் கட்டுப்பாடுகளையோ, பொருளாதாரச் சமநிலைகளோ தோன்றி தரகரின் தலையீட்டுக்கு இடமின்றி உற்பத்தியும் நுகர்வும் இடம்பெற வழிவகுக்கும்.

## 1991 க. பொ. த. விசேட பரீட்சையில்

## மாணவரின் மொத்த புள்ளிகள் அடுத்தமாத இறுதியில் வரும்

[யாழ்ப்பாணம்]

1991 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர விசேட பரீட்சைக்கான மொத்தப் புள்ளி விபரம் அடுத்த மாத இறுதிப் பகுதியிலேயே அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இப் பரீட்சை உயர்தர வெட்டுப்புள்ளி அனுப்பும் விடயத்தில் மேலதிக தாமதம் ஏற்பட்டமைக்கு 1991-92 கல்வியாண்டின் விசாரணை வழக்கு முற்று முழுதாக அறிவிப்பை விடாததே காரணமென தெரிவிக்கப்படுகிறது.

1992-93 கல்வியாண்டு புகும் மாணவர்கள் காத்திருக்க வேண்டியதன் அவசியத்தைவலியுறுத்தியுள்ளார் பரீட்சை ஆணையாளர். (05)

## எழுதுநர்சேவைபதவிஉயர்வு கொழும்பில் மட்டும் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

எழுதுநர் சேவையின் அதி சிறப்பு வகுப்புத் திறையடிப்படையில் பதவியேற்றம் செய்வதற்கான பரீட்சை 1991, இலங்கை திட்டவமைப்பு சேவையின் 11ஆம் வகுப்பில் உதவிப்பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான அனைவருக்குமுரிய போட்டிப் பரீட்சை 1992 ஆகிய இரண்டு பரீட்சைகளும் இந்த மாதம் 27ம் திகதி கொழும்பில் மட்டுமே நடைபெறவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் யாவும் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். மேலும் மாவட்ட ஆசிரியர் சேவைத் திட்டத்தின்கீழ் ஆங்கில உதவி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை -1992, எதிர்வரும் மார்ச்மாதம் 6 ஆம் திகதி நடாத்தப்படுமென பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (பா)

## உல்லாச பயணி விபத்தில் பலி

[கொழும்பு]

கொள்ளுப்பிட்டி பகுதியில் நடைபெற்ற வான் விபத்தொன்றில் சிக்கி ஜேர்மன் உல்லாச பயணி ஒருவர்நேற்று முன்தினம் பலியானார்.

ஜேர்மன் உல்லாச தம்பதிகள் பயணம் செய்த வான் ஒன்று கொள்ளுப்பிட்டியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றிற்குள் புகுந்து விபத்திற்குள்ளானது. இதனால் அதில் பயணம் செய்த பெண்மணி பலியானார்

## பரிசளிப்பு வைபவம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மருதனார்மடக் கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் 80 பேருக்கு பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட உள்ளனர்.

பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 23 ஆம் திகதி இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

180 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு விசேட பரிசில்கள் வழங்கப் படும் என்று தெரிவிக்கப் பட்டது. (42)

## விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகபீடங்களுக்கிடையில் நடைபெறும் வருடாந்த மெய்வல்லுனர் போட்டிகள் மார்ச் மாதம் 6-ம் 7-ம் திகதி பல்கலைக்கழக மைதானத்தில் இடம் பெறும், இதற்கான சகல ஒழுங்குகளையும் திரு. சீ. தியாகராஜா உடற் கல்வி பணிப்பாளர் மேற் கொண்டுள்ளார். (42)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

17-02-1992 அன்று வளலாயில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலின் போது வீரச்சாவடைந்த



லெப்டினன்ட் சுரேஸ் / தில்லை

[அருளானந்தசாமி ஜெயசீலன்]

வீரப்பிறப்பு 28-2-1972

வீரச்சாவு 17-2-1992

எம்மின அழிவினை அழிக்கவே எழுந்தாய் !
உன்மன ஆசையைத் துறந்துமே சென்றாய்-
தன்மான உணர்வுடன் களத்தினில் நிமிர்ந்தாய்
தமிழர் தம் எதிரியை நெருப்பாகி அழித்தாய்
வளலாய் எனும் களத்திலே விதையாக வீழ்ந்தாய்
நீரிடை நடந்த உன் மேன்மையை நினைக்கவா?
நிலத்திடை வீழ்ந்த உன்நினைவினை மறக்கவா?
வீறுடன் நடந்த உன்வீரஅடிச் சுவட்டினில்
ஆறுபோல் எழுந்தணி திரளுவோம் ஆறுவாயா சுரேஸ்?


இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி மதியபோசன நிகழ்வுகளில் சகபோராளிகளையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"சுரேஸ் இல்லம்"
இன்பருட்டி
பருத்தித்துறை.
17-2-1993

உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

(சி- 6030)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னைமடியில் 14-05-1952

அந்நியமண்ணில் 17-12-1991

பிரான்சில் அகால மரணமடைந்த

கந்தையா தெட்சனாமூர்த்தி

(தெட்சனா)


நண்பனாய் அல்லல் தீர்த்து நல்லவனாகி நின்றாய்
துன்பத்தில் கைகொடுத்து தூக்கி நீ எழுப்பிவிட்டாய்
அன்பனாய் நடித்து உன்னை அவதிக்குள்ளாக்கி விட்டார்
பிஞ்சிலே பிடுங்கிவிட்டார் நெஞ்சமோ கலங்குதையா
உங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

171/3, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

அம்மா, சகோதரன், சகோதரிகள், மருமக்கள், நண்பர்கள்.

(சி/6028)

## 2-ம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



**செந்திவடிவேலு மணிவண்ணன் (மணி)**

(முன்னாள் ஹாட்லி கல்லூரி மாணவன்)

திதி: ₂5-0₂-1993

அன்னையின் மடியில் 19-04-1969 — தமிழீழ மண்ணில் 17 0₂-1991

மண்ணினை நினைத்த தாலே
மறவர்க்குத் துணையாய் நின்றாய்
கண்ணினுக் இனிய வளைவில்
மாவீரர் கதைகள் சொன்னாய்
விண்ணிலே வந்த ஷெல்தான்
வீழ்த்திற்றோ உன்னுடலை
பண்ணிலே இனிய பாவால்
பாடுவோம் உன்னை—நாளும்
எண்ணியே வாடு கின்றோம்
நினைவிலே வாழு கின்றோம்.

- குடும்பத்தினர்

'இலக்குமி வாசா'
கே. கே. எஸ். றோட்,
வல்வெட்டித்துறை.
(4297)

தற்போதைய முகவரி
'பொன்னா வில்லா'
இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.

## பொது அறிவு போட்டி

யாழ்.றோட்டரக்ட் கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் பேராசிரியர் லூதர் ஜெயசிங்க ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான நான்காவது பொது அறிவுப் போட்டித் தொடரிலே யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் ஆகிய பிரிவுகளில் இருந்து முறையே தெரிவு செய்யப்பட்ட வேம்படி மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, புனிதஹென்றி அரசர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், ஹாட்லிக்கல்லூரி, வடஇந்து மகளிர் கல்லூரி, புங்குடுதீவு மகாவித்தியாலயம், மண்டைதீவு மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## அறிவியற் கருத்தரங்கு

"எமது பிரதேசத்து மக்களின் சர்வதேச இடப்பெயர்வும் அதன் விளைவுகளும்" என்னும் தலைப்பிலான அறிவியற் கருத்தரங்கொன்று எதிர்வரும் 26-02-93 அன்று (வெள்ளிக்கிழமை) நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது யாழ் பல்கலைக்கழக புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கா. குகபாலன் அவர்கள் இதில் உரையாற்றவுள்ளார். இந் நிலையத்தினால் மாதாமாதம் நடைபெற்று வரும் அறிவியற் கருத்தரங்குத் தொடரின் எட்டாவது நிகழ்வாக இது இடம் பெறுகிறது. அத்துடன் இந் நிலையத்தின் போஷகராக இருந்த அமரர் ச. திருச்சிற்றம்பலம், வீரவேங்கை பிரதாப் (அருணாசலம்கந்தசாமி) ஆகியோரின் உருவப்படத் திறப்பு விழாவும் நடைபெறவுள்ளது.

## இளங்கலைஞர் மன்றத்தின் இசை விழா

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தின் ஆதரவில்

### ஒன்பதாம் நாள் நிகழ்ச்சிகள்

### 17 - 2-93 (புதன்) இன்று

### இடம்: மன்றக் கலாமண்டபம்

**மாலை 4.00 — 5.00 மங்கள இசை**
நாதஸ்வரம் : எஸ். ஜெகநாதன்
எஸ். ரத்தினம்
தவில் : எஸ். முருகையா
ஆர். சுப்பிரமணியம்

**5.00 — 5.10 மிருதங்க இசை**
கே. கண்ணதாசனின் மாணவர்கள்
பி. ரதிரூபன், எஸ். சுதர்சமோகன். கே. மயூரன்

**5.10 — 5.30 புல்லாங்குழல்: க. நிஷாகரன்**
வயலின் : ரிஜீ கௌரி
மிருதங்கம்: பி. ரதிரூபன்

**5.30—6.00 வீணை: சுந்தரேஸ்வரி ஜெயக்குமார்**
மிருதங்கம்: எஸ். துரைராஜா

**6.00 — 6.45 பாட்டு: எஸ். நாகராஜா**
வயலின் : எஸ். கோபிதாஸ்
மிருதங்கம் கே. கண்ணதாசன்

**இரவு 6.45 — 7.00 மங்கள விளக்கேற்றல்**
திரு. இ. சோமசுந்தரம் [பரிஸ் ரெக்ஸ்]
திரு. கோவிந்தசாமி [லீலா ஸ்ரோர்ஸ், சங்கானை]
திரு. ந. விஜயவேல்குமரன்
திரு. க. அன்னலிங்கம் [மற்றா பேணிச்சர்]
தலைவர்: என். தவநாதன் (தலைவர், தெ. ப. நோ. கூ. சங்கம்)
சிறப்பு விருந்தினர்: அருட்திரு. அ.ஜெயக்குமாரன் (யாழ். பேராயம் தென்னிந்திய திருச்சபை)

**7.00 — 8.00 இசைக் கச்சேரி**
வயலின் : வி. கே. குமாரசாமி
மிருதங்கம் : எஸ். மகேந்திரன்
கடம் : சதா வேல்மாறன்

**8.00 — 9.15 பரத நாட்டியம்**
நாட்டியக்கலைமணி செல்வி மைதிலி அம்பலவாணர் -மாணவிகள்
நட்டுவாங்கம் — மைதிலி அம்பலவாணர்
பாட்டு — வர்ணராமேஸ்வரன்
மிருதங்கம் — கே. கண்ணதாசன்
வயலின் — ஆர். கேசவமூர்த்தி

வாழ்த்துவோர் :

**ரூபன் ஸ்ரோர்ஸ்**

திருநெல்வேலி மார்க்கட், திருநெல்வேலி
(சி-5965)

## அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ. சங்கம் (வரையறுக்கப்பட்டது)

பங்குப்பணம் ரூபா 100/-செலுத்தி அங்கத்தவராவதற்கு

### முடிவுத் திகதி 05. 03. 1993

5. 3. 93ஆம் திகதிக்கு முன் ரூபா 100/- பங்குப்பணம் செலுத்தி அங்கத்துவம் பெறாத

கிளைக்குழு உறுப்பினர்கள், கிளைக்குழு உறுப்பினர் பதவியை இழக்க நேரிடும்.

பொதுச்சபைப் பிரதிநிதிகள், பொதுச்சபைக் கூட்டங்களில் பங்குபற்ற இயலாது.

30. 9. 93 காலாண்டில் முடிவடையும் வாக்காளர் பட்டியலில் இடம்பெற இயலாது.

30. 9. 93 வாக்காளர் பட்டியலில் இடம்பெறாதவர்கள் கிளைக்குழுத் தேர்தலில் போட்டியிடவோ, வாக்களிக்கவோ இயலாது.

எனவே சங்கத்தில் ஏற்கனவே அங்கத்தவர்களாக உள்ளவர்கள், தங்கள் பங்குப் பணத்தை ரூபா 100/- ஆக அதிகரிக்கவும், அங்கத்தவர்கள் ஆவதற்கும் இறுதிச் சந்தர்ப்பம் 5. 3. 93 ஆகும்.

5. 3. 93க்கு முன்னர் சகல கிளைகளிலும், நிவாரணக் கிளைகளிலும் பங்குப் பணத்தைச் செலுத்தவும், அங்கத்தவர் விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

இறந்த அங்கத்தவர்களின் பின் உரித்தாளர்கள் தங்களது பெயரில் பங்கினை மாற்ற சங்கக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வாக்காளர் பட்டியலினை பங்குப்பண விபரங்களையும் பின்வரும் கிளைகளிலும், காரியாலயத்திலும் பார்வையிடலாம்.

1. கிளை 1 (இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோவிலடி) கிளை 1, 5, 6
2. கிளை 2 (சீரணிச்சந்தி - சண்டிலிப்பாய்) கிளை 2, 4
3. கிளை 3 (மருதனாமடம் - புகையிரத நிலையத்தடி) கிளை 3
4. கிளை 7 (அளவெட்டி தெற்கு)
5. கிளைகள் 8, 9, 10, 11, 12 என்பன அக்கிளைகளில்.

ப. கனகரத்தினம்
தலைவர்

(சி/6035)

வே. தர்மராஜா
செயலாளர்

## 1-ம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 08 - 01 - 1937



உதிர்வு: 17 - 02 - 1992

திருமதி

**சுப்பிரமணியம் தங்கம்மா**

'மரணங்கள் தவிர்க்க முடியாதவைதான் - ஆனால் சில மரணங்கள் சகிக்க முடியாதவை'

17. 02. 1992 அன்று வவுனியா விளக்கு வைத்த குளம் என்னும் இடத்தில் நடைபெற்ற விமானத் தாக்குதலில் மரணமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்,

ஆலயடி வீதி,
வத்தாறுமுனை.
(சி-5999)

கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

### சிந்தனைக்கு

மண்ணில் மனிசனுக்கு மனிதன் செய்யும் கொடுமை, எண்ணற்ற ஆயிரம் பேர் ஏங்கி அழச் செய்யும்.

— ராபர்ட் ப்ரன்ஸ்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 17 - 02 - 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண் - 03

# தார்மீக பலம் இவர்களுக்கு உண்டோ?

"ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் அரசாங்கம் அரச சார்பற்ற பத்திரிகைகள் மீது ஒரு யுத்தத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளது" இவ்வாறு பதினொரு எதிர்க் கட்சிகள் கூட்டாக விடுத்த அறிக்கையில் கண்டனம் செய்துள்ளன.

எதிர்க் கட்சிகள் பிரேமதாசா அரசாங்கம் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டு நிராகரிக்கக் கூடிய தொன்றல்ல. ஏனெனில் இதனை நிருபிப்பது போன்றே சிறிலங்கா அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. அரச சார்பற்ற, அரசைக் கண்டிக்கும் போக்குக் கொண்ட பத்திரிகைகள் சீல் வைக்கப்பட்டுள்ளன. இப்பத்திரிகைகளுக்கு வழங்கப்படும் அரசாங்கத்தின் விளம்பரங்களுக்குத் தடை விதித்துள்ளதோடு, தனியார் விளம்பரங்களும் செல்லாமல் தடுப்பதில் அரசாங்கம் அக்கறை காட்டுகிறது. மேலும் பத்திரிகையாளர் மிரட்டல்களுக்கும் உள்ளாகியுள்ளனர். கத்திக் குத்தும், கொலையும் இடம்பெற்றும் உள்ளது.

ஆனால் பிரேமதாசாவின் அரசாங்கம் மேற்கொள்ளும் இக்கெடுபிடிகளை எதிர்க்கட்சிகள், குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால் கண்டிக்க முடியுமா? அதற்கான தார்மீக பலம் உண்டா? உண்மையில், இல்லை என்றே கூறலாம். 1970க்கும் 1977க்கும் இடைப்பட்ட தமது ஆட்சிக் காலத்தில் பல பத்திரிகைகளை நிறுத்துவதற்கும், அரச உடைமை ஆக்கியதற்கும், பத்திரிகை மீது தணிக்கைச் சட்டத்தைப் பிரயோகிப்பதற்கும் காரணமாக இருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி எவ்வாறு இன்று பத்திரிகையினதும், பத்திரிகையாளர்களினதும் பிரச்சினை குறித்தும், சுதந்திரம் குறித்தும் பேச முடியும்?

இதேவேளை கொழும்புப் பத்திரிகைகளும், தம் மீது அரசாங்கம் தொடுத்துள்ள யுத்தம் குறித்து பெரிய அளவில் அலட்டிக் கொண்டாலும், அவை தமது கடந்த காலப் போக்கிலிருந்து தமது அணுகுமுறையை மாற்றிக் கொள்ளா விட்டால் ஒரு போதும் அரசிற்கெதிரான போரில் அவை வெற்றி அடையப் போவதில்லை.

அதாவது தென்னிலங்கைப் பத்திரிகைகள் எப்பொழுதும் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கவில்லை. சிங்கள பேரினவாத அரசியல் கட்சிகள்

# வெளிவாரி பரீட்சையில் சித்தியடைந்தோர்

## வணிக முதல்தேர்வு

யாழ் பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப்படிப்புகள் வணிக முதல்தேர்வு 1991 இல் சித்தியடைந்தோர் பெயர் விபரம் வருமாறு:

வி. அபிஷா, ஏ. அருந்ததி, ஏ. அர்ச்சயகுமார், கே. அற்புதராஜா, எஸ்.பி. பாலகரன், பி. பாலதாஸ், எஸ். பாமினி, எஸ். சந்திரசேகரம், செல்வி ஏ. செல்லையா, எஸ். இளங்கீரன், ஆர். கோபிசிறி, எம். கௌரி, ரி. கௌரி, பி. இந்திரன், என். யமுனாராணி, ஆர். ஜேசுராஜா, ஏ. ஜெயலக்சுமி, ஜே ஜெயரமேஸ், என். ஜெயரஞ்சினி, கே. கலைவாணி, எல். கனகா, கே. காந்தினி, ரி. கிருபாகினி, ஆர். கோடீஸ்வரன், எஸ். குகதாஸ், எஸ் லீலாவதி, எஸ். மலர்விழி, எஸ். மதியோகநாதன், எஸ். மோகனதாஸ், எஸ். நளாயினி, என். நந்தினி, பி. நிர்மலா, எம். நிர்மலநாயகி, கே. பரமேஸ்வரன், கே. பாஸ்கரன், யு. பத்மராஜா, ஏ பிரபாகரி, ரி பிரபா, வி. கோ. ரஜனி, ஆர். ராஜி, ஏ. ரஜிதா, ஏ. ரவிச்சந்திரன், பி. கௌரி, எஸ். சரோஜாதேவி, கே. சரோஜினி, பி. சசிகலா, ரி. சசிகலா, ஆர். சத்தியவாணி, ஏ. செந்தில்வாசன், ஏ. சிவநேசன், எஸ் சிவஷாலினி, என் சுபாஜினி, எஸ். சுகந்தினி, ரி. சுகந்தி, கே. சூரியகலா, ஏ. தர்சினா, கே. தாமரைச்செல்வி, கே. தர்மசோதி, ச. தயாகரன் ஜி. துஷ்யந்தி, எஸ். உமையாள், ஜி. வானதி, பி. வாசுகி, என். வதனி, ஜே. வேரணகுரி, கே. யசோதா, என். சூரியநாதன், ஜே. பத்மநேசன், எஸ். விஜயமலர், எஸ். சந்திரிகா, எஸ். ஜெரல்டின் ஜீஸ்ரீனா, எஸ். கமலநாதன், ஆர். கோமளாதேவி, ரி. மோகன், வி நீலாயினி கே தவரஞ்சிதராஜன், என். யோகமலர்.

## கலைமுதல்தேர்வு

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பின் படிப்புகள் கலைமுதல் தேர்வு 1991 இல் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:-

எஸ். அகல்ஜா, எஸ். அமலதாஸ், பி. அமுதினி, ரி. அன்ரன் அரியபூசணம், வி. அனுலாதேவி, வி. அனுஷியா, கே. அருளானந்தன், ரி. அருள்மொழி, ரி. அருணகிரிநாதன், கே. அருந்தவராஜா, என். பானுந்தினி, திருமதி எம்.கே. பாலசிங்கம், கே. பாஸ்கரன், பி. பவானி, எஸ். பகவதி, ஜி. பகீரதி கே. என். மதன், என். டெய்சிராணி, எஸ். ஈஸ்வரமூர்த்தி, எஸ். எட்வேட்றெஜினோல்ட், ஜே. எட்வின், ஏ எலிசபெத் ஜேவகுமாரன், ஈ. எமிலியன்ஸ், சி. பிரான்சிஸ் சேவியர், எஸ். கணேசலிங்கம், ஐ. கணேசன், கே. கணேசவேல், பி. கணேஸ்வரி, கே. ஞானபாஸ்கரன், எஸ். ஞானவல்லி, கே. கௌரி, ஏ. கௌரிதேவி, எஸ். இந்துமதி, ஜே. ஜசியுனா, வி. ஜமுனா, எஸ். ஜானகிதேவி, எஸ். ஜனார்த்தனன், எஸ். யசோதா, பி. ஜீவிதா, எஸ். ஜெயசந்திரிகா, ரி. ஜெயலட்சுமி, எம். ஜெயக்குமார், எஸ். ஜெயக்குமார், எஸ். ஜெயந்தி, எஸ். யோகதாஸ், கே. யோய் சந்திரவதனி, எஸ். ஆர். ஜோசிமேரி ஏ. சி, டி. யூலியனா ஜெயறேனுகா, எஸ். எம். கைலைநாதன், ஆர். கலைமதி, ஆர். கலாநிதி, எஸ். கலாதேவி, திருமதி எஸ். கலாவதி, எஸ் கமலாவதி, கே. கமலேஸ்வரன், எம். காஞ்சனாதேவி, ரி. கணேசமூர்த்தி, எஸ். கே. கண்ணதாஸ், கே. கந்தவேல், எஸ். கருணாகரன், எஸ். கௌசல்யா, ரி. கிரிதரன், ரி. கிருபாகரன், எஸ். கோகிலன், கே. கிருஷ்ணகரன், வி. கிருஷ்ணமூர்த்தி, வி. கிருஷ்ணபிள்ளை, எஸ். கனகசபாபதி, திருமதி எல். குலேந்திரன், கே. குமாரதாசன், ஏ. குமரேசமூர்த்தி, எஸ். குமுதினி, எஸ். குணபாலசிங்கம், எஸ். லதா, எஸ். மகாலெட்சுமி ஆர் மகாலஷ்மி, ரி. மகாசிவம், என். நளினி, திருமதி வி. மாலினிதேவி, வி. மனோரஞ்சிதமலர், எஸ். ஆர். மரியறோசறியோ ஏ.சி, ஜே. எஸ். மரியநாயகம், எவ். மேரியன்றேசா, எஸ். மதினி, வி. மீனஸ்வரன், கே. மேகலா, ஏ. மோசஸ்றேவரட்ணம், திருமதி எஸ். நகுலேஸ்வரன், ஆர். நளினி, வி. நந்தினி, ஆர். நிர்மலா, ரி. பதுமநிதி, எஸ் பொன்னம்பலம், பி. பிரகலாதேவி, ரி. புஸ்பலதா, ஏ. புஸ்பராணி, ஈ. எஸ். புவிராஜசிங்கம், வி. பி. ரகுவரன், வி. ரஜனி, எஸ். ராஜசேகரம், ஈ. வே. ராஜேஸ்வரன், எஸ். ராஜேஸ்வரி, ஆர். ராஜேஸ்வரி, வி. ஆர். ராஜ்குமார், ஆர். ரஞ்சிதகலா, எஸ். ரஞ்சிதமலர், ஏ. ரஞ்சிதமலர்.

ஏ. ராதா, கே ரதிதேவி, எஸ். ரவீந்திரா, எம். ரவீந்திரன், எஸ். ரவீந்திரநாதன், ஜி. சிவரமணி, எஸ். சகுந்தலா, ஏ. சாந்தகுமாரி, வே. சந்திரசேகரன், பி. சாரதாமணி, எஸ். சரவணபவன், எம். சரவணபவன், ஏ. சரோஜாதேவி, எஸ். ஆர். சத்தியேந்திரம்பிள்ளை, ஏ. சி. செபநாயகம், எஸ். செலின் சுகந்தி, பி. செல்வமலர், எஸ் செல்வராஜா, எஸ். செல்வராணி, எஸ். சிவகலதா, வே. ஷகிலா, ஆர். சசிகலா, எம். சின்னராஜா, எஸ். சிவதாஸ், ஆர். சிவஞானசோதி, எஸ் சிவகாமி, வே. சிவகுலத்திலகசிங்கம், ரி. சிவகுமாரன், ஐ சிவராஜா, எஸ் சிவரஞ்சினி, வே. சிவசக்தி, எஸ் சிவசக்தி, சி எஸ். சுமதி, ஆர். சிவபாதசேகரம், வி. என். சூரியகுமாரி, எம். சிறீதரன், பி சிறீகுமரபரன், எம். சிறிமுருகவேல், ஆர். சிறிநடராஜா, எஸ். சிறிரங்கநாதன், திருமதி எஸ். சிறிரங்கநாதன்.

ரி. சிறிதரன், வி. சிறிதரன், எஸ். சுபாங்கி, எஸ். சுகந்தினி, ஆர். சி. சுகந்தினி, எம் சுகந்தி, ஆர். சுகந்தி, எஸ். சுகன்யா, கே. சுகிர்தராணி, ஓ. சுமதி, பி. சுமதி, வி. சுந்தரவதனா, எஸ். சுந்தரேஸ்வரன், திருமதி ஏ. தம்பையா, ஆர். தனலெட்சுமி, எஸ். தாட்சாயினி, பி. தர்மகுலேந்திரன், கே. தர்மபாலன், திருமதி ஆர் தர்மராசா, எஸ். தவலிங்கம், என் தவராஜா, கே. தயாளினி, எஸ், தயாபரன், எஸ். தயாகரன், வி. தயாபரி, என். தேவசுந்தரி, ரி. தேவதயாளன். வி. தில்லைநாயகி, திருமதி சி, ஏ. திருக்குமார் ஏ. திருமகள் ஏ. திருநாவுக்கரசு, எஸ். தியாகலிங்கம், எஸ். சி. உதயநாதன், கே. உலகேஸ்வரி, என். உமையாள் ஏ. உமாசங்கரி, ஆர். உமையாள், எஸ் உருத்திரேஸ்வரன், ஜி. வளர்மதி, வி வளர்மதி: எஸ். வனஜாதேவி, ஜே. வனிதா. எஸ். வத்சலா, கே. விஜயலதா, எஸ். விஜயலெட்சுமி, வி. விஜயகுமார், ஜெ. விஜயலக்சுமி, கே. விஜயராணி, ஏ. விமலேந்திரன், ஆர். விமாதீஸ்வரி, கே. விநாயகமூர்த்தி, செல்வி ஜே சோமசுந்தரம் திருமதி எஸ். மகாசிவம், எஸ். ஜெகதீஸ்வரியம்மா, ஏ. ஆனந்தராஜன், கே, சுமதி, ரி. அகிலாராணி, ரி, அம்பிகா, எஸ். அம்பிகை, எம். காயத்திரி. எஸ். கீதாஞ்சலி, டி. ஜானகி, ஜே ஞானசீலி, ஜே யோகினிமாலதி, ஆர். கல்பனா, எஸ். கனகசபாபதி, ஏ. குகநேசன். சி. பி. லோறன்ஸ்பிள்ளை, கே. நித்தியகலா, பி. பாக்கியரஜனி. எஸ். பிரேமலதா, எஸ். புனிதவதி, என். ராகினி எம். சின்னத்தம்பி. என். சூரியகுமாரன். ரி. சுபாகரன் எஸ். சுபாஜினி, எஸ். தேவகி. எஸ். சிவராசா ஜி வசந்திராதேவி.

# ஊர்வலங்களில் வன்முறை ஒருபோதும் சகிக்க முடியாது

**- பி. வி. நரசிம்மராவ்**

(டில்லி)

ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்களின் போது வன்முறை ஒருபோதும் அனுமதிக்கப்பட மாட்டாது என்று இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லி பொலிஸ் அதிகாரிகளிடையே நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், அரசியல் கட்சிகளாயினும் சரி, பிற அமைப்புக்களாயினும் சரி வன்முறையை ஊக்குவிப்பதைச் சகித்துக்கொள்ள முடியாது என்றும் குறிப்பிட்டார்.

எதிர்வரும் இருபத்தைந்தாம் திகதியன்று புதுடில்லியில் பாரதீய ஜனதாக் கட்சியினர் பொதுக்கூட்டமொன்றையும்,

# அமெரிக்கா இணைந்தது

(வாஷிங்டன்)

பொஸ்னியாவில் சமாதானத்தை ஏற்படுத்தும் சர்வதேச முயற்சியில் அமெரிக்காவும் சேர்ந்து கொண்டுள்ளது. இதற்கென விசேட பிரதிநிதி ஒருவரையும் அமெரிக்கா நியமித்துள்ளது.

இதனால் சமாதான முயற்சியில் சேர்பியாவிற்கு எதிராக மேலும் கடுமையான அமுல் நடத்தும் பணியில் அமெரிக்கத்

பதினொரு எதிர்க் கட்சிகள் கூட்டாக விடுத்த அறிக்கையில் கண்டனம் செய்துள்ளன.

எதிர்க் கட்சிகள் பிரேமதாசா அரசாங்கம் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டு நிராகரிக்கக் கூடிய தொன்றல்ல. ஏனெனில் இதனை நிரூபிப்பது போன்றே சிறிலங்கா அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. அரச சார்பற்ற, அரசைக் கண்டிக்கும் போக்குக் கொண்ட பத்திரிகைகள் சில வைக்கப்பட்டுள்ளன. இப்பத்திரிகைகளுக்கு வழங்கப்படும் அரசாங்கத்தின் விளம்பரங்களுக்குத் தடை விதித்துள்ளதோடு, தனியார் விளம்பரங்களும் செல்லாமல் தடுப்பதில் அரசாங்கம் அக்கறை காட்டுகிறது. மேலும் பத்திரிகையாளர் மிரட்டல்களுக்கும் உள்ளாகியுள்ளனர். கத்திக் குத்தும், கொலையும் இடம்பெற்றும் உள்ளது.

ஆனால் பிரேமதாசாவின் அரசாங்கம் மேற்கொள்ளும் இக்கெடுபிடிகளை எதிர்க்கட்சிகள், குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால் கண்டிக்க முடியுமா? அதற்கான தார்மீக பலம் உண்டா? உண்மையில், இல்லை என்றே கூறலாம். 1970க்கும் 1977க்கும் இடைப்பட்ட தமது ஆட்சிக் காலத்தில் பல பத்திரிகைகளை நிறுத்துவதற்கும், அரச உடைமை ஆக்கியதற்கும், பத்திரிகை மீது தணிக்கைச் சட்டத்தைப் பிரயோகிப்பதற்கும் காரணமாக இருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி எவ்வாறு இன்று பத்திரிகையினதும், பத்திரிகையாளர்களினதும் பிரச்சினை குறித்தும், சுதந்திரம் குறித்தும் பேச முடியும்?

இதேவேளை கொழும்புப் பத்திரிகைகளும், தம்மீது அரசாங்கம் தொடுத்துள்ள யுத்தம் குறித்து பெரிய அளவில் அலட்டிக் கொண்டாலும், அவை தமது கடந்த காலப் போக்கிலிருந்து தமது அணுகுமுறையை மாற்றிக் கொள்ளா விட்டால் ஒருபோதும் அரசிற்கெதிரான போரில் அவை வெற்றி அடையப் போவதில்லை.

அதாவது தென்னிலங்கைப் பத்திரிகைகள் எப்பொழுதும் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கவில்லை. சிங்கள பேரினவாத அரசியற் கட்சிகள் நடந்து கொண்டது போன்றே பத்திரிகைகளும் நடந்து கொண்டன. சிங்களபேரினவாதம் அரசியல் வாதிகள் எவ்வாறு சிறுபான்மை மக்களினதும் அப்பாவிச் சிங்கள மக்களினதும் நலனுக்கு முரணாக நடந்துகொண்டனவோ, சிங்கள மக்களை எவ்வாறு இனவாதத்திற்குள் இட்டுச் சென்றனவோ அதே போன்றே பத்திரிகைகளும் சிங்கள மக்களை இனவாதத்திற்குள் இட்டுச் சென்றன.

அதாவது ஓர் இனத்திற்கு எதிராக சட்டங்கள் உருவாக்கப்பட்ட போதும், இராணுவத்தின் துணை கொண்டு அரசாங்கம் நியாய பூர்வமான போராட்டங்களை இரும்புக்கரம் கொண்டு நசுக்கிய போதும் அரசியல்வாதிகள் போன்று பத்திரிகைகளும் அவற்றிற்கு ஆதரவளித்தன. பிரச்சினைகளின் உண்மையான வடிவங்கள் மக்களைச் சென்றடையாமல் தடுத்தன. மக்களினால் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளவே முடியவில்லை.

இந்நிலையிலேயே இன்று பத்திரிகைகள் மீது அரசாங்கம் யுத்தம் ஒன்றைத் திணித்த போது சிங்கள மக்கள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. கடந்த காலத்தில் தொழிற் சங்கங்கள், இயக்கங்கள் என்பனவற்றின் மீது விதித்த தடைகளை ஏற்றுக் கொண்டது போன்று இதனையும் ஏற்றுக் கொண்டார்கள். ஆகையினால் தற்பொழுதாவது பத்திரிகைகள் தமது நிலைப்பாட்டை மாற்றி பிரச்சினைகள் சரியாக மக்களைச் சென்றடைய வழி வகுத்தால்தான் இனிவரும் காலத்திலாவது ஐக்கிய தேசிய கட்சி தொடுக்கும் யுத்தங்களில் இருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ள முடியும். இல்லையேல் தோற்கடிக்கப்படுவது நிச்சயம்.

---

யு. பத்மராஜா, ஏ. பிரபாவதி பிரபா, வி. கோ. ரஜனி, ஆர். ராஜி, ஏ. ரஜிதா, ஏ. ரவிச்சந்திரன், பி. கௌரி, எஸ். சரோஜா தேவி, கே. சரோஜினி, பி. சசிகலா, ரி. சசிகலா, ஆர். சத்திய வாணி, ஏ. செந்தில் வாசன், ஏ. சிவநேசன், எஸ் சிவஷாலினி, என். சுபாஜினி, எஸ். சுகந்தினி, ரி. சுகந்தி, கே. சூரியகலா, ஏ. தர்சிகா, கே. தாமரைச் செல்வி, கே. தர்மசோதி, ஈ. தயாகரன், ஜி. துஷ்யந்தி, எஸ். உமையாள், ஜி. வானதி, பி. வாசுகி, என். வதனி, ஜே. வேரணகுமி, கே. யசோதா, என். சூரியநாதன், டே. பத்மநேசன், எஸ். விஜியமலர், எஸ். சந்திரிகா, என். ஜெரல்டின் ஜீஸ்மினா, எஸ். கமலநாதன், ஆர். சோமனாதேவி, ரி. மோகன், வி. நீலாயினி, கே. தனரஞ்சிதராஜன், என். யோகமலர்.

ஜூலியனா, வி. ஜமுனா, எஸ். ஜானகிதேவி, எஸ். ஜனார்த்தனன், என். யசோதா, பி. ஜீவிதா, எஸ். ஜெயசந்திரிகா, ரி. ஜெயலட்சுமி, எம். ஜெயக்குமார், என். ஜெயக்குமார், எஸ். ஜெயந்தி, என். யோகதாஸ், கே. யோய் சந்திரவதனி, எஸ். ஆர். ஜோசிமேரி ஏ. சி, டி. யூலியனா ஜெயறேனுகா, எஸ். எம். கைலைநாதன், ஆர். கலைமதி, ஆர். கலாநிதி, எஸ். கலாதேவி, திருமதி எஸ். கலாவதி, எஸ். கமலாவதி, கே. மகேஸ்வரன், எம். காஞ்சனா தேவி, ரி. கணேசமூர்த்தி, எஸ். கே. கண்ணதாஸ், கே. கந்தவேல், எஸ். கருணாகரன், எஸ். கௌசல்யா, ரி. கிரிதரன், ரி. கிருபாகரன், எஸ். கோகிலன், கே. கிருஷ்ணகரன், வி. கிருஷ்ணமூர்த்தி, வி. கிருஷ்ண பிள்ளை, எஸ். கனகசபாபதி, திருமதி எல். குலேந்திரன், கே. குமாரதாசன், ஏ. குமரேசரன், பி. சாரதாமணி, எஸ். சரவணபவன், எம். சரவணபவன், ஏ. சரோஜாதேவி, எஸ். ஆர். சத்தியேந்திரம் பிள்ளை, ஏ. சி. செயநாயகம், எஸ். செலின் சுகந்தி, பி. செல்வமலர், எஸ் செல்வராஜா, என். செல்வராணி, எஸ். சினேகலதா, கே. ஷகிலா, ஆர். சசிகலா, எம். சின்னராஜா, எஸ். சிவதாஸ், ஆர். சிவஞானசோதி, எஸ் சிவகாமி, கே. சிவகுலத்திலகசிங்கம், ரி. சிவகுமாரன், ஐ சிவராஜா, எஸ் சிவரஞ்சினி, கே. சிவசக்தி, எஸ் சிவசக்தி, சி எஸ். சுமதி, ஆர். சிவபாதசேகரம், ரி. என். சூரியகுமார், எம். சிறீதரன், பி. சிறீகுமரபரன், எம். சிறிமுருகவேல், ஆர். சிறிநடராஜா, எஸ். சிறிரங்கநாதன், திருமதி எஸ். சிறிரங்கநாதன்.

வி. விஜயகுமார், ஜே. விஜயலக்சுமி, கே. விஜயராணி, ஏ. விமலேந்திரன், ஆர். விமாதீஸ்வரி, கே. விநாயகமூர்த்தி, செல்வி ஜே சோமசுந்தரம், திருமதி எஸ். மகாசிவம், எஸ். ஜெகதீஸ்வரியம்மா, ஏ. ஆனந்தராஜன், கே. சுமதி, ரி. அகிலாராணி, ரி. அம்பிகா, எஸ். அம்பிகை, எம். காயத்திரி, எஸ். கீதாஞ்சலி, டி. ஜானகி, ஜே. ஞானசீலி, ஜே யோகினிமாலதி, ஆர். கல்பனா, எஸ். கனகசபாபதி, ஏ. குகநேசன், சி. பி. லோறன்ஸ்பிள்ளை, கே. நிர்மலா, பி. பாக்கிய ரஜனி, எஸ். பிரேமலதா, எஸ். புனிதவதி, என். ராமினி, எம். சின்னத்தம்பி, என். சூரியகுமாரன், ரி. சுபாகரன், எஸ். சுபாஜினி, எஸ். தேவகி, எஸ். தியாகராஜா ஜீ வசந்திராதேவி.

---

# ஊர்வலங்களில் வன்முறை ஒருபோதும் சகிக்க முடியாது

**- பி. வி. நரசிம்மராவ்**

(டில்லி)

ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்களின் போது வன்முறை ஒருபோதும் அனுமதிக்கப்பட மாட்டாது என்று இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லி பொலிஸ் அதிகாரிகளிடையே நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், அரசியல் கட்சிகளாயினும் சரி, பிற அமைப்புக்களாயினும் சரி வன்முறையை ஊக்குவிப்பதைச் சகித்துக்கொள்ள முடியாது என்றும் குறிப்பிட்டார்.

எதிர்வரும் இருபத்தைந்தாம் திகதியன்று புதுடில்லியில் பாரதீய ஜனதாக் கட்சியினர் பொதுக்கூட்டமொன்றையும், பேரணியொன்றையும் நடத்தப் போவதாக அறிவித்திருக்கின்றமை தெரிந்ததே.

# மத்திய அரசைக் கண்டித்து தமிழகத்தில் மறியல் போர்

(சென்னை)

மத்திய அரசு அரிசி விலையையும், உர விலையையும் உயர்த்தி இருப்பதைக் கண்டித்தும், ஹிந்தித் திணிப்பைக் கண்டித்தும் சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் அ.இ.அ.தி.மு.க.வினர் மறியல் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

சேலத்தில் கோவை எக்ஸ்பிரஸ் ரயிலை நிறுத்த முயன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான பழனிச்சாமி, நடேசன், பெருமாள், சரஸ்வதி, சுந்தராம்பாள், எஸ். சரோஜா, பழனியம்மாள் உட்பட பெருமளவானோர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருச்சியில் பெரும்பாலும் அஞ்சல் அலுவலகம் முன்னே மறியலில் ஈடுபட முன்வந்த அ.இ.அ.தி.மு.க. வினரில் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக்குமார் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# இந்திய கடற்படையினர் சோமாலியா சென்றனர்

(மொகாடிஸ்யூ)

இந்திய கடற்படையின் உதவியுடன் தெற்கு சோமாலியாவில் உதவிப் பணி நடவடிக்கைகளை ஐ. நா. குழந்தைகள் நலநிதியம் (யுனிசெவ்) உருவாக்கியுள்ளது.

ஊட்டச்சத்துக் குறைந்த சோமாலியா குழந்தைகளுக்கான உணவுப் பொருள்கள் மருந்துகள் மற்றும் உறைவிடத்திற்கான பொருள்களையும் யுனிசெவ் வழங்கவுள்ளது.

சோமாலியாவில் உதவித் திட்டங்களை விரிவாக்கிட இராணுவங்களைப் பயன்படுத்துவதற்கான மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக இந்தியக் கடற்படையின் உதவி அமைந்திடும் என்று சோமாலியாவில் யுனிசெவ் நிறுவன தலைவர் பத்திரிகைகளுக்கு அளித்துள்ள பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்கா இணைந்தது

(வாஷிங்டன்)

பொஸ்னியாவில் சமாதானத்தை ஏற்படுத்தும் சர்வதேச முயற்சியில் அமெரிக்காவும் சேர்ந்து கொண்டுள்ளது. இதற்கென விசேட பிரதிநிதி ஒருவரையும் அமெரிக்கா நியமித்துள்ளது.

இதனால் சமாதான முயற்சியில் சேர்பியாவிற்கு எதிராக மேலும் தடைகள் அமுல் நடத்தும் பணியில் அமெரிக்கத் தருப்புகளும் ஈடுபடுவர் என்று அமெரிக்காவின் வெளியுறவுச் செயலர் வாரன் கிறிஸ்தோபர் கூறியுள்ளார்.

அங்கோலாவில்

# சண்டையை நிறுத்த கூட்டாக வேண்டுகோ

(லுவாண்டா)

அங்கோலாவில் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் யூனிட்டா படைகளும், அங்கோலா அரசும் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா, ரஷ்யா, போர்த்துக்கல் என்பன கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

அங்கோலாவின் இரண்டாவது பெரிய நகரமான குவாம்போவை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் முயற்சி வரும் புதன்கிழமைக்கு முன்பாக முடிவுக்கு கொண்டுவரப்படாவிடில் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அவை எச்சரித்துள்ளன.

1991ஆம் ஆண்டில் யூனிட்டாவிற்கும் அங்கோலா அரசுக்கும் இடையிலான ஒப்பந்தம் ஒன்றில் இந்த மூன்று நாடுகளும் கைச்சாத்திட்டிருப்பது தெரிந்ததே.

# ஈராக்கின் ஆதிபத்திய உரிமை பேணப்படல் வேண்டும்

**- அரபு அமைச்சர்கள் கூட்டாக வலியுறுத்து**

ஐக்கியம், ஜனநாயகம், அண்டைய நாடுகளின் சௌஜன்ய உறவுகள் என்ற அடிப்படையில் ஈராக் மக்கள் அவர்களது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உரிமை பேணப்பட வேண்டும் என்று ஈரான், துருக்கி, சிரியா ஆகிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.

டமாஸ்கஸ் நகரில் சிரிய வெளியுறவு அமைச்சர் வெளியிட்ட இவ் அறிக்கையில் மேலும் ஈராக்கின் ஆதிபத்திய உரிமைப்பாடு பேணப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

# மீனவர் படகுகளில் வயர்லஸ் தமிழக அரசு திட்டம்

(சென்னை)

மீனவர்களின் இயந்திரப் படகுகளிலும் நாட்டுப்படகுகளிலும் வயர்லஸ் கருவிகளைப் பொருத்த தமிழக அரசு திட்டமிட்டுளளது.

நேற்று முன்தினம் மதுரையில் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்த மாநில மீன்வளத்துறை அமைச்சர் திரு. ஜெயக்குமார் நடுக்கடலில் செல்கையில் ஏதாவது அபாயம் ஏற்பட்டால் உடனடியாகத் தகவல் அனுப்பித் தொடர்பு கொள்ள வசதியாக இது உதவும் என்றார். இதற்கான அனுமதி விரைவில் மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் எனவும் சென்னை, கன்னியாகுமரி, இராமேஸ்வரம், தஞ்சாவூர் மாவட்டங்களில் இதற்கான கட்டுப்பாட்டு நிலையங்கள் அமைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## சட்டம், ஒழுங்கு தமிழகத்தில் சீர்குலைவு

### -இந்திய கம்யூனிஸ்ட் குற்றச்சாட்டு

[சென்னை]

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும் ஊழல் மலிந்து விட்டதாகவும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி குற்றம் சாட்டியுளளது.

இதுதொடர்பாக மேற்படி கட்சியின் பொதுச்செயலாளர் நேற்று சென்னையில் விடுத்த அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு கண்டனம் தெரிவித்திருப்பதுடன் தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் "திகரித்துள்ளதாகவும் இது தேசிய அளவில் மிகுந்த கவலைதரக்கூடிய ஒருவிடயமெனவும் குறிப்பிட்டுள்ளது.

இவற்றைக் கட்டுப்படுத்த தமிழக அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் காங்கிரஸ் கட்சி மற்றும் அ. தி. மு. இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றை கொண்ட முற்போக்கு ஜனநாயக முன்னணி இப்போது செயலிழந்தமைக்கு செல்வி ஜெயலலிதாவின் நடவடிக்கைகளும் அணுகுமுறைகளுமே காரணமென்று அந்த அறிக்கை குற்றம்சாட்டியுள்ளது.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பாரதீய ஜனதா கட்சி மற்றும் அதன் துணை அமைப்புகளிலிருந்து விடுபட வேண்டுமென அது மேலும் கேட்டுள்ளது.

## தமிழக காங்கிரஸ் தலைவர் ராவை சந்தித்து பேச்சு

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியும், சட்டப்பேரவைக் கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும் நேற்று புதுடில்லியில் இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் பி. வி. நரசிம்மராவை சந்தித்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தங்களது கட்சியின் கூட்டணி குறித்து பேச்சு நடாத்தியுள்ளனர்.

பி. வி. நரசிம்மராவின் சிறப்பு தூதர்களாக தமிழ் நாட்டிற்கு அனுப்பப்பட்ட மோதிலால் வோரா, கே. வி. தங்கபாலு ஆகியோர் அளித்த அறிக்கையின் அடிப்படையில் ராமமூர்த்தியும், பாலசுப்பிரமணியமும் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டதாகவும் அவர்கள் அங்கு தங்கியிருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் இவ்விரு கட்சிகளுக்கிடையே தற்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமை குறித்து பரிசீலிப்பதற்காக புதுவை அ. இ. அ. தி. மு. கழக சட்டமன்ற உறுப்பினர்கள் நேற்று புதுச்சேரியில் அவசர கூட்டமொன்றை நடாத்தினார்கள் எனவும் தெரியவருகின்றது

## சிகரட் மோசடி; எண்பது லட்சம் ரூபாகையாடல்செய்த 3 இராணுவத்தினர் விளக்கமறியலில்

(கொழும்பு)

சிகரட்டில் 80லட்ச ரூபா மோசடி செய்த மூன்று சிறிலங்கா இராணுவத்தினர் விளக்கமறியலில் வைக்கபட்டுள்ளனர்.

எண்பது லட்சத்திற்கு மேற்பட்ட தொகைக்கு சிகரட்டில் மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட மூன்று சிறிலங்கா இராணுவத்தினரை சி ஐ டி பொலிசார் கடந்த ஞாயிறு கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இந்த சிகரட் மோசடியை யொட்டி இராணுவ சேம நல சங்கத்தைச் சேர்ந்த மூன்று இராணுவத்தினரையும் நீதிவான் திரு செல்வராஜா இம் மாதம் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்

## பிரேமதாசாவுடன் மேடையில் சிறிமா தோன்றக்கூடாது

### -சுதந்திரக்கட்சி தீர்மானம்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் பதினொராவது தேசிய மாநாட்டில் எதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது இம் மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும்படி சிறிமாவோ அழைக்கப்பட்டிருந்தார்.

சுகததாஸா உள்ளக அரங்கில் நடைபெற்ற இந்த மாநாட்டில் கலந்து கொள்ள முதலில் சிறிமாவோ சம்மதம் தெரிவித்திருந்தார். ஆனால், ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கலந்து கொள்ளும் கூட்டங்களில் சிறிமாவோ கலந்துகொள்ளக் கூடாது என்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சி எடுத்த முடிவைத் தொடர்ந்தே சிறிமாவோ முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை எனத் தெரியவிக்கப்படுகிறது.

## கொள்ளையடித்த சிப்பாய் குற்றத்தைஒப்புக்கொண்டார்

(கொழும்பு)

ருகுணு பல்கலைக்கழக விரிவுரையாளர் வீட்டு கொள்ளை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இராணுவ சிப்பாய் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒத்துக் கொண்டுள்ளார்.

ருகுணு பல்கலைக்கழக விரிவுரையாளர் சனத் ஹெட்டி ஆராய்ச்சியின் வீட்டில் இருந்து முப்பது ஆயிரம் ரூபா பணமும், ஏனைய சொத்துக்களையும் கொள்ளையடித்த குற்றச்சாட்டின் பேரில் இந்த இராணுவ சிப்பாய் கைது செய்யப்பட்டிருந்தார்.

## சிவராத்திரி

(வடமராட்சி)

புலோலி பசுபதீஸ்வரன் சிவன் ஆலயத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி மஹா சிவராத்திரி விழா நடைபெறவுள்ளது. அன்று இரவு பலகலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

(யோ)

★

சாவகச்சேரி அமிர்தபாஷிணி சமேத சந்திரசேகர வாரிவனநாத சிவன் ஆலயத்தில் நிகழும் ...

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக புவியற்துறையினரின் நான்காவது கருத்துரைத் தொடர் இன்று மாலை 3-00 மணிக்கு புவியியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய கருத்துரையில் "பிரதேச அபிவிருத்தித் திட்டமிடல் நிறுவன அமைப்பு" எனும் தலைப்பில் யாழ். செயலக பிரதேச திட்டமிடல் பணிப்பாளர் திரு. பத்மநாதன் கருத்துரை வழங்குவார். ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு புவியியற் கழகத்தினர் வேண்டுகின்றனர்.

## சதுரங்க போட்டி யாழ்.இந்து முதலிடம்

(சுன்னாகம்)

யாழ் யைன்ஸ் கழக ஆதரவுடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம் நடாத்திய பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கச் சுற்றுப் போட்டிக்கான பரிசளிப்பு விழா சென்றதிங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

மேற்படி சுற்றுப்போட்டியில், யாழ். இந்துக்கல்லூரி முதலாமிடத்தையும், மகாஜனாக் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, யூனியன்கல்லூரி என்பன முறையே 2-ம், 3-ம், 4-ம் இடங்களையும்பெற்றன.

செல்வன் ம. மற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் பிரதம விருந்...

## யாழ். பல்கலை. நூலகம் புதிய பகுதி திறப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக் கழக நூலகம் மாணவர்களின் நன்மை கருதி விரிவாக்கப்பட்டு வருகிறதாக யாழ். பல்கலைக்கழக உதவி நூலகர் திருமதி பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னரும் 1991 - 1992 கல்வியாண்டில் மாணவர்களின் தொகை அதிகரிக்கப்பட்ட பின்னர் பல்கலைக்கழக நூலகப் புதிய பிரிவு அடுத்த மாத முற்பகுதியில் மாணவர்களின் பாவனைக்கு விடப்படுமெனத் தெரிவித்தார்.

புதிய பிரிவில் உடனுதவு புத்தகங்களும் சஞ்சிகைகளும் வைக்கப்படவுள்ளதாகதிருமதி பரராஜசிங்கம் மேலும் தெரிவித்தார். [05]

## விளையாட்டுப் போட்டி

[வடமராட்சி]

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலான கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இன்று நடைபெறும் துடுப்பெடுத்தாட்ட போட்டி புற்றளை மகாவித்தியாலய மைதானத்திலும், 20ஆம் திகதி இன்பருட்டி காண்டீபன் மைதானத்தில் கரபந்தாட்டப் போட்டியும், 27ஆம் திகதி அல்வாய் நக்கீரன் விளையாட்டு மைதானத்தில் வலைபந்தாட்டப்போட்டியும், 28ஆம் திகதி ஹாட்லி மைதானத்தில் எல்லை விளையாட்டுப் போட்டியும் அடுத்த மாதம் 6ஆம் 7 ஆம் திகதிகளில் ஹாட்லி மைதானத்தில் தடகள விளையாட்டுப் போட்டியும் நடைபெறவுள்ளன.

கடந்த 10ஆம் திகதி வல்லை திருவில் மைதானத்தில் உதைபந்தாட்டப் போட்டியும் ஆரம்பமாகியுள்ளன.

மற்றும் யாழ் மாவட்ட கைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான இறுதிப் போட்டி இன்றாகும். சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியும், ஹாட்லிக் கல்லூரியும் மோதும். (யோ

## மண்ணெய் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட மண்ணெண்ணெய் செயலக புனர்வாழ்வுப் பகுதியினரால் சுழற்சி முறையில் வழங்கப்படவுள்ளதாக தெரிய வருகின்றது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது: இம் முறை எடுத்துவரப்பட்டுள்ள 135பரல் மண்ணெண்ணெயை எந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு வழங்குவது என்பது பற்றி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் அனேகமாக இன்று அல்லது நாளை இது பற்றிய தீர்மானம் எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (சி)

எயிட்ஸ்

கல்விமூலம் தடுத்துவிடலாம் அறிவியல் கண்டுபிடிப்புக்கள் மூலமும் இந்நோயை எப்படித் தடுக்க முடியும் என்று புரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

எயிட்ஸ் வைரஸ் எப்படி எதனால் செயற்படுகிறது என்பது இன்னமும் புரியவில்லை என்று அறிவியல் ஆய்வாளர் தெரிவிக்கின்றனர்.

ராணுவக்

கள இனத்துக்கே ஏகபோகமாகிவிடும்.'' இவ்வாறு விடுதலைப் புலிகள் தை - மாசி இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது

சமஷ்டி என்றபோர்வையில் சிறினிவாசன் தீர்வுத்திட்டம் என்ற போர்வையில் பிரேமதாசா தனது யோசனையை உலாவவிட்டுள்ளார் சமஷ்டி என்ற சொல் தமிழர்களை உளவியல் ரீதியாக மைக்கப் பயன்படுத்தப்படும் அர்த்தமற்ற வெறும் வார்த்தைதான் ஆனால் அரசியல் சூட்சுமம் தெரியாத சில சிங்களவர் இதை எதிர்க்கத் தொடங்கினர்.

இத் திட்டத்தின் இலக்குகளையும் இறுதி விளைவுகளையும் விளக்கி இத்திட்டத்தை ...

புலிகள்

ஞர்களும் விடுவிக்கப்பட்டனர் என்றும இவர்களில்விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் எவரும் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு

இறது. கடந்த ஆண்டின் இறுதி ஆறு மாதங்களில் ஏற்றுமதியிலும்விட இறக்குமதிக்கு இரண்டாயிரத்து ...

வித்திருப்பதுடன் தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும் இது தேசிய அளவில் மிகுந்த கவலைதரக்கூடிய ஒருவிடயமெனவும் குறிப்பிட்டுள்ளது.

இவற்றைக் கட்டுப்படுத்த தமிழக அரசு உடனடி நடவடிக்களும் அனுசமுறைகளுமே காரணமென்று அந்த அறிக்கை குற்றம்சாட்டியுள்ளது.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பாரதீய ஜனதா கட்சி மற்றும் அதன் துணை அமைப்புகளிலிருந்து விடுபட வேண்டுமெனவும் அது மேலும் கேட்டுள்ளது.

# தமிழக காங்கிரஸ் தலைவர் ராவை சந்தித்து பேச்சு

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியும், சட்டப்பேரவைக் கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும் நேற்று புதுடில்லியில் இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் பி. வி. நரசிம்மராவை சந்தித்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தங்களது கட்சியின் கூட்டணி குறித்து பேச்சு நடாத்தியுள்ளனர்.

பி. வி. நரசிம்மராவின் சிறப்பு தூதரொக தமிழ் நாட்டிற்கு அனுப்பப்பட்ட மோதிலல் ஓரா, கே. வி. தங்கபாலு ஆகியோர் அளித்த அறிக்கையின் அடிப்படையில் ராமமூர்த்தியும், பாலசுப்பிரமணியமும் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டதாகவும் அவர்கள் அங்கு தங்கியிருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் இவ்விரு கட்சிகளுக்கிடையே தற்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமை குறித்து பரிசீலிப்பதற்காக புதுவை அ. இ. அ. தி. மு. கழக சட்டமன்ற உறுப்பினர்கள் நேற்று புதுச்சேரியில் அவசர கூட்டமொன்றை நடாத்தினார்கள் எனவும் தெரியவருகின்றது.

சிகரட் மோசடி;

## எண்பது லட்சம் ரூபாகையாடல்செய்த 3 இராணுவத்தினர் விளக்கமறியலில்

(கொழும்பு)

சிகரட்டில் 80லட்ச ரூபா மோசடி செய்த மூன்று சிறிலங்கா இராணுவத்தினர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எண்பது லட்சத்திற்கு மேற்பட்ட தொகைக்கு சிகரட்டில் மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட மூன்று சிறிலங்கா இராணுவத்தினரை சி ஐ டி பொலிசார் கடந்த வியாழன் கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இந்த சிகரட் மோசடியையொட்டி இராணுவ சேம நல சங்கத்தைச் சேர்ந்த மூன்று இராணுவத்தினரையும் நீதிவான் திரு செல்வராஜா இம் மாதம் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

விக்கப்படுகிறது இம் மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும்படி சிறிமாவோ அழைக்கப்பட்டிருந்தார்.

சுகததாஸா உள்ளக அரங்கில் நடைபெற்ற இந்த மாநாட்டில் கலந்துகொள்ளக் கூடாது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி எடுத்த முடிவைத் தொடர்ந்தே சிறிமாவோ முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை எனத் தெரியவிக்கப்படுகிறது.

## கொள்ளையடித்த சிப்பாய் குற்றத்தைஒப்புக்கொண்டார்

(கொழும்பு)

ருகுணு பல்கலைக்கழக விரிவுரையாளர் வீட்டு கொள்ளை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இராணுவ சிப்பாய் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒத்துக் கொண்டுள்ளார்.

ருகுணு பல்கலைக்கழக விரிவுரையாளர் சனத் ஹெட்டி ஆராய்ச்சியின் வீட்டில் இருந்து முப்பது ஆயிரம் ரூபா பணமும், ஏனைய சொத்துக்களையும் கொள்ளையடித்த குற்றச்சாட்டின் பேரில் இந்த இராணுவ சிப்பாய் கைது செய்யப்பட்டிருந்தார்.

## சிவராத்திரி

(வடமராட்சி)

புலோலி பசுபதீஸ்வரன் சிவன் ஆலயத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி மஹா சிவராத்திரி விழா நடைபெறவுள்ளது. அன்று இரவு பலகலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (யோ)

★

சாவகச்சேரிஅமிர்தபாஷணி சமேத சந்திரசேகர வாரிவன நாத சிவன் ஆலயத்தில் நிகழும் மங்களகரமான மகா சிவராத்திரி விழா வெள்ளிக்கிழமை வழமைபோல் நான்குசாமமும் விசேட அபிஷேக ஆராதனையும், இறைவழிபாடும் இடம்பெறும் இக்கபோது புராணபடனம், கூட்டு பிரார்த்தனை பக்திப்பாடல்கள் ஆகியநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

1993 மாசி மாத கல்வி வேலைத்திட்ட மீளாய்வும், பங்குனி மாத கல்வி வேலைத்திட்டம் தயாரித்தலும் சம்பந்தமான கல்வி உத்தியோகத்தர் கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை காலை 9 30 மணிக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும். [22]

★

ப. நோ. கூ. சங்க தலைவர்கள், பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழன் பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு வை. செந்திநாதன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

## சதுரங்க போட்டி யாழ்.இந்து முதலிடம்

(சுன்னாகம்)

யாழ் லயன்ஸ் கழக ஆதரவுடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம் நடாத்திய பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கச் சுற்றுப் போட்டிக்கான பரிசளிப் புவிழா சென்றதிங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

மேற்படி சுற்றுப்போட்டியில், யாழ். இந்துக்கல்லூரி முதலாமிடத்தையும், டிஸ்ராஜனாக் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, யூனியன்கல்லூரி என்பன முறையே 2-ம், 3-ம், 4-ம் இடங்களையும்பெற்றன.

செல்வன் ம. மற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். (9,11)

## மணிக்கூடு அன்பளிப்பு

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு அபிவிருத்திச் சபையினர் ஆயிரத்து ஐந்நூறு ரூபா பெறுமதியான மூன்று சுவர் மணிக்கூடுகளை அன்பளிப்பு செய்யவுள்ளனர்.

குழந்தைகள் பிரிவு, கிளினிக் பிரிவு, வெளிநோயாளர் பிரிவுகளுக்கு மணிக்கூடுகள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை இவ்வைத்தியசாலையில் அண்மையில் நடந்த கொள்ளைச் சம்பவத்தின் போது திருடனைப் பிடித்த வைத்தியசாலை காவலாளிக்கும் அபிவிருத்திச்சபை அவரது சேவையைப்பாராட்டி ஆயிரம் ரூபா பணமும் வழங்கவுள்ளது. [யோ]

## ஓய்வூதியம்

[வடமராட்சி]

பருத்தித்துறை புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு பெப்ரவரி மாத ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. (யோ)

அல்வாய் நக்கீரன் விளையாட்டு மைதானத்தில் வலைப்பந்தாட்டப்போட்டியும், 28ஆம் திகதி ஹாட்லி மைதானத்தில் எல்லை விளையாட்டுப் போட்டியும் அடுத்த மாதம் 6ஆம் 7 ஆம் திகதிகளில் ஹாட்லி மைதானத்தில் தடகள விளையாட்டுப் போட்டியும் நடைபெற

எயிட்ஸ்

கல்விமூலம் தடுத்துவிடலாம் அறிவியல் கண்டுபிடிப்புகள் மூலமும் இந்நோயை எப்படித் தடுக்க முடியும் என்று புரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

எயிட்ஸ் வைரஸ் எப்படி எதனால் செயற்படுகிறது என்பது இன்னமும் புரியவில்லை என்று அறிவியல் ஆய்வாளர் தெரிவிக்கின்றனர்.

ராணுவத்

கள இனத்துக்கே ஏகபோகமாகிவிடும்.'' இவ்வாறு விடுதலைப் புலிகள் தை - மாசி இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது

சமஷ்டி என்ற போர்வையில் சிறினிவாசன் தீர்வுத்திட்டம் என்ற போர்வையில் பிரேமதாசா தனது யோசனையை உலாவவிட்டுள்ளார். சமஷ்டி என்ற சொல் தமிழர்களை உளவியல் ரீதியாக மைக்கப் பயன்படுத்தப்படும் அர்த்தமற்ற வெறும் வார்த்தைதான் ஆனால் அரசியல் சூட்சுமம் தெரியாத சில சிங்களவர் இதை எதிர்க்கத் தொடங்கினர்.

இத்திட்டத்தின் இலக்குகளையும் இறுதி விளைவுகளையும் விளக்கி இத்திட்டத்தை சிங்கள மக்கள் ஏற்கச்செய்ய பிரேமதாசா நடவடிக்கை எடுத்து வருகிறார். இத்திட்டத்தை விளக்கி அமெரிக்க திலகசிறி என்ற புனைபெயரில் தயான் ஜெயதிலக பத்திரிகையில் கட்டுரைஎழுதிவருகிறார். இவரது கட்டுரையில் கூறப்பட்டிருப்பவையே பிரேமதாசா அரசின் தற்போதைய நிலைப்பாடாகும்.

ஹாட்லிக் கல்லூரியும் மோதும். (யோ

## மண்ணெய் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட மண்ணெண்ணெய் செயலக புனர்வாழ்வுப் பகுதியினரால் சுழற்சி முறையில் வழங்கப்பட உள்ளதாக தெரிய வருகின்றது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது: இம் முறை எடுத்துவரப்பட்டுள்ள 135பரல் மண்ணெண்ணெயை எந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு வழங்குவது என்பது பற்றி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் அனேகமாக இன்று அல்லது நாளை இது பற்றிய தீர்மானம் எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (சி)

புலிகள்

ஞர்களும் விடுவிக்கப்பட்டனர் என்றும் இவர்களில்விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் எவரும் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு

இறது. கடந்த ஆண்டின் இறுதி ஆறு மாதங்களில் ஏற்றுமதியிலும்விட இறக்குமதிக்கு இரண்டாயிரத்து நூறு கோடி ரூபாவை அதிகமாகச் செலவும் செய்துள்ளது. இதில் ஆயுதக் கொள்வனவும் அடங்கும். அரசின் மொத்தக் கடன் 30 ஆயிரம் கோடி ரூபாவாகும். இக்கடனுக்கு வட்டி செலுத்துவதற்காக மொத்த தேசிய வருமானத்தில் 30 வீதத்தைப் பயன்படுத்தி வருகிறது.

# மரண அறிவித்தல்

திருமதி

## கண்மணி இராசரத்தினம்

உரும்பராயைச் சேர்ந்த திருமதி கண்மணி இராசரத்தினம் அவுஸ்ரேலியாவில் 20. 1. 93இல் காலமானார். இவர் காலஞ்சென்ற மு. வ. இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி கனகசபை அன்னம் அவர்களின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற மயில்வாகனம், ஆச்சிமுத்து, செல்லமுத்து, பொன்னையா, அருளம்மா, கதிரவேலு, அன்னலட்சுமி, சின்னத்தம்பி அவர்களின் சகோதரியும், வைத்தியகலாநிதி நற்குணம், காலஞ்சென்ற சற்குணம் (கணக்காளர்), நிர்க்குணன் (பொறியியலாளர்) அவர்களின் அன்புத் தாயாரும், வைத்திய கலாநிதி அன்னலட்சுமி, மாலினி, உமாராணி அவர்களின் மாமியும், வைத்திய கலாநிதி மகேசன், கலாநிதி யசோதா, உமா, ராதா, வசந்தி, ஆரணி, தாரணி ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரினது அந்திமக் கிரியைகள் அவுஸ்ரேலியாவில் நடைபெற்றது.

தகவல்:-

வைத்திய கலாநிதி செ. இந்திரராசா
உரும்பராய் (பெறாமகன்)

Dr. R. Natkunam
60, George Street,
Mt ISA
Queensland 4825
Australia

(4301)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

16-02-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8334

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

28-1901, 24-7941 26-7663, 24-5734, 24-6431, 24-5119, 28-6546, 41-4129, 24-4491, 24-7949, 41-8432, 27-4289, 24-2024, 27-9626, 26-3937, 41-9989, 42-3239, 22-6897, 41-9396

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

22-2250, 24-5886, 27-9090, 24-922, 26-9495, 26-9158, 42-1325. 26-2972, 27-6769, 28-732. 26-1349, 24 9744, 26-2764, 26-8430, 27-2088, 28-5862, 22-3591, 27-5197, 42-1019

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 61 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது